# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 02 செவ்வாய்க்கிழமை (18.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 22


# புலிகள் மீது தடைவிதிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த திட்டம்!

## இன்னும் இரண்டொரு தாக்குதல்கள் தொடர்ந்தால் வேறு வழியில்லையாம்



கொழும்பு,டிசெம்பர்18

தமிழீழ விடுதலைப் புலிகளை அரசு தடை செய்யும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோடி காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் அரச படையினருக்கு எதிரான பெரிய தாக்குதல்களைத் தொடர்வார்களேயானால் அந்த இயக்கத்தை இலங்கை அரசு தடை செய்யும் என்று தமது திட்டத்தைக் கோடி காட்டியிருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கொழும்புப் பிரமுகர்களுக்கு அலரி மாளிகை இல்லத்தில் நேற்று நத்தார் விருந்தளித்த சமயம் அங்கு பிரசன்னமாகியிருந்த பத்திரிகையாளர்களிடமே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று 'ரோய்ட்டர்' தகவல் வெளியிட்டுள்ளது.

"இன்னும் இரண்டு, மூன்று தாக்குதல்கள் நடந்தால், எமக்கு வேறு மாற்று மார்க்கம் ஏதும் இருக்காது - புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதைத் தவிர" - என்றார் அவர்.

"எங்களது பொறுமைக்கும் - சகிப்புத் தன்மைக்கும் - ஓர் எல்லை உண்டு" என்றும் தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் ஒடுக்கினால்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா வழங்கிய 'ராடர்'களை அங்கிருந்து வந்த குழு சோதனை

கொழும்பு, டிச.18

இந்தியா இலங்கைக்கு வழங்கியுள்ள 'ராடர்'கள் சரிவர செயற்படுகின்றனவா என்பதைச் சோதனை செய்வதற்கு இந்திய பொறியிலாளர் குழு ஒன்று நேற்றுக் கொழும்பு வந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் விமானப் படையின் தாக்குதலைகளை முறியடிப்பதற்காக இலங்கைக்கு இந்தியா 'ராடர்' கருவிகளை வழங்கியுள்ளது. அந்தக் கருவிகள் விமானப்படையின் தளங்கள் மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன.

அந்தக் கருவிக்ள் உரியவாறு செயற்படுகின்றனவா, அவற்றின் செயற்பாடுகள் திருப்தியாக உள்ளனவா என்பன குறித்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர சமாதானத்தை நிச்சயம் ஏற்படுத்துவேன்!

### ஆதர் கிளாக்கிடம் சொன்னார் இப்படி

கொழும்பு,டிச.18

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை நிச்சயம் ஏற்படுத்துவேன். - இப்படி உறுதிபடத் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

விஞ்ஞான ஆய்வு எழுத்தாளரும், செய்மதித் தொழில்நுட்பத்தின் தந்தை என வர்ணிக்கப்படுபவருமான சேர் ஆர்தர் சி. கிளாக்கின் மூன்று ஆசைகளில் ஒன்றான இலங்கையில் நிரந்தர சமாதானமேற்பட வேண்டுமென்ற ஆவலைப் பூர்த்தி செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் தாம் மேற்கொள்ளப் போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்தார்.

கொழும்பு மத்திய வங்கி கேட்போர் கூடத்தில் ஆர்தர் கிளார்க்கின் 90ஆவது பிறந்த தின நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

இதன்போது உரையாற்றிய ஆர்தர் சி.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தலை வெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட பரு. செஞ்சிலுவைத் தலைவரின் சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்,டிச.18

கைதடி வடக்கு, மாவடி மூலையில் நேற்றுமுன்தினம் தலை உடலிலிருந்து வெட்டப்பட்டு வேறான நிலையில் மீட்கப்பட்ட சடலங்களில் ஒன்று இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் பருத்தித்துறைக் கிளைத் தலைவர் சூரியகாந்தி தவராஜா (வயது - 43) என்பவருடையதென நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டுக்குச் சென்ற சுமார் பத்து, பன்னிரெண்டு பேர் கொண்ட ஆயுததாரிகள் குழுவொன்று இவரைக் கடத்திச் சென்றதெனவும் -

பின்னர் நேற்று முன்தினம் கைதடி வடக்கு, மாவடி மூலையில் வெட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக ஒப்படைக்கப்பட்டது எனவும் - கூறப்படுகின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை, பூநகரி, வவுனியாவில் சரமாரியாக ஆட்லறி ஷெல் வீச்சு

கொழும்பு,டிசெ.18

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முகமாலை மற்றும் பூநகரிப் பகுதிகளை நோக்கி நேற்றுக்காலை படையினர் கடும் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

படையினர் சரமாரியாக ஏவிய ஷெல்கள் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடித்தன என்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை,

வவுனியா படைத்தளத்தில் இருந்தும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள புளியங்குளம் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதன்போது மக்களின் வீடுகள் சில தேசமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

## இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க இந்தியா ஏதாவது செய்தாக வேண்டும்

### எடுத்துரைக்க இந்தியா செல்கிறது முக்கூட்டணி

கொழும்பு,டிசெம்பர்18

முடிவில்லாமல் தொடர்ந்து பெரும் சிக்கலுக்குள் சிக்கியிருக்கும் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இனியும் தாமதிக்காமல் இந்தியா ஏதாவது செய்தாக வேண்டும்.

இவ்வாறு புளொட் சித்தார்த்தன், கூட்டணி ஆனந்தசங்கரி, பத்மநாபா அணியின் ஸ்ரீதரன் (சுகு) ஆகியோரடங்கிய முக்கூட்டு அணி புதுடில்லியிடம் கூட்டாக வற்புறுத்த இருக்கின்றது.

இதற்காக இந்த அணியினர் மூவரும் நாளை புதன்கிழமை புதுடில்லிக்குப் புறப்படுகின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புதுடில்லியில் சுமார் ஒருவார காலம் தங்கியிருந்து புதுடில்லி அரசின் உயரதிகாரிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள், பிற கருத்துருவாக்கிகள் எனப் பல தரப்பினரையும் சந்தித்து இலங்கை விடயம் குறித்து நேரடியாகப் பேசுவதற்கு அவர்கள் திட்டமிட்டிருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

2006 செப்ரெம்பரில் முக்கூட்டு அணியினர் புதுடில்லிக்கு இவ்வாறு கூட்டாக விஜயம் செய்திருந்தனர். இப்போது இரண்டாவது கூட்டுப் பயணத்தை இந்த அணியினர் மேற்கொள்கின்றனர்.

"இந்த இனச்சிக்கலுக்கு தீர்வு ஒன்றைக் கொண்டுவருவதற்கு இந்தியா ஏதாவது செய்தாகவேண்டும். அதுதான் எமது பயணத்தின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 'யுனிசெவ்'வின் இலங்கைப் பிரதிநிதி புலிகளை சந்தித்தமைக்கு கண்டனம்

### வெளிவிவகார அமைச்சின் செயலர் அதிருப்தி

கொழும்பு,டிசெ.18

'யுனிசெவ்'வின் இலங்கைக்கான பிரதிநிதி பிலிப்பிடுயாமெலி கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்தித்ததை கடுமையாக கண்டித்திருக்கும் அரசு, வெளிவிவகார அமைச்சின் அறிவுரைகளை 'யுனிசெவ்' நிறுவன அதிகாரிகள் பின்பற்றத் தவறிவிட்டனர் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த வாரம் 'யுனிசெவ்'வின் இலங்கைக்கான பிரதிநிதி கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியமை தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹென்ன நேற்று 'யுனிசெவ்'வின் இலங்கைக்கான பிரதிநிதியை வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்து அரசின் அதிருப்தியை நேரடியாகத் தெரிவித்திருக்கிறார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவரைப் படையில் இணைப்பது குறித்து பேசுவதற்கே புலிகளைச் சந்தித்தேன்

### 'யுனிசெவ்' பிரதிநிதி சொல்கிறார்

கொழும்பு,டிசெ.18

'யுனிசெவ்' வால் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படும் திட்டங்களை ஆய்வு செய்வதற்காகவே நான் அங்கு சென்றேன். இதற்கு நான் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைகளைப் பெற்றுள்ளேன்.

-இப்படி வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹென்னவிடம் பிரதிநிதி பிலிப்பிடுயாமெலி தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது. இது குறித்து அவர் கூறியுள்ளவை வருமாறு:-

'யுனிசெவ்'வின் இலங்கைக்கான பிரதிநிதியாக கடந்த செப்ரெம்பர் மாதம் நான் பதவியேற்றுக்கொண்டேன். துரதிஷ்டவசமாக இலங்கை வெளிவிவகார அமைச்சின்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பயிற்சிநெறியில் பங்குபற்றியவர்களுக்கு இன்று கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.18

தென்மராட்சிப் பிரதேச ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு 'யுனிசெவ்' அனுசரணையுடன் நடத்தப்பட்ட ஆங்கிலப் பயிற்சி நெறியில் பங்குபற்றியவர்களுக்கான கொடுப்பனவுகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் இத்தகவலை தெரிவித்துள்ளார். (அ-203)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது மன்ற மிருதங்க ஆசிரியரான
மதிப்பிற்குரிய
**மாரிமுத்து சிதம்பரநாதன்**
(சங்கீத ரத்தினம்)



அவர்கள் கடந்த 40 ஆண்டுகளாக மிருதங்க சபைக்கு ஆற்றிய சிறந்த சேவையினை கௌரவிக்கும் வகையில் 2007ஆம் ஆண்டுக்கான வடமாகாண கௌரவ ஆளுநர் விருது வழங்கப்பட்டமையினையிட்டு பெருமகிழ்ச்சியடைந்து பாராட்டுவதுடன் இன்னும் பல விருதுகளைப் பெற எல்லாம்வல்ல ஈழத்துச் சிதம்பரத் தில்லைக்கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபையினர், ஆசிரியர், மாணவர்கள்
**கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.** (69085)



## வெளிவந்துவிட்டது
**அஷ்டலக்ஷ்மி கலண்டர்கள்**

தினக்கலண்டர்:- 230/
மாத படக் கலண்டர்:- 130/
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விஷேச கழிவு வழங்கப்படும்.

அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை,
"மயிலகம்",
271/15, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (69091)



## OFF- SET MACHINE FOR SALE

A3 அளவுடைய **'டேவிற்சன்'** (Davidson 701 - D) ஓப் செற் மெஷின் விற்பனைக்கு உண்டு. 21, 22, 23 - 12 - 2007 ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை இயந்திரத்தைப் பார்வையிடலாம்.

மெஷினுக்கான தங்கள் விலைப் புள்ளியை (Quotation) 27-12-2007 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் ஒட்டிய கடித உறையில் வைத்து வழங்கவும். தபால் மூலம் அனுப்புவதாயின் பதிவுத் தபாலாக Registered Letter அனுப்பவும்.

66, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 - 222 7678

சைவபரிபாலன சபை


## பகிரங்க ஏல விற்பனை-2007

யாழ்.நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத சான்றுப் பொருள்கள் 22.12.2007 அன்று பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏல விற்பனை காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும். பொருள்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவாக பணத்தினை மட்டும் கொடுக்க வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**பதிவாளர்**
(சி/54740) **யாழ்.நீதிவான் நீதிமன்றம்.**

## கண்ணீர் அஞ்சலி



**அமரர்**
**சூரியகாந்தி தவராசா**
(முன்னாள் தலைவர் - பருத்திதுறைப் பிரிவு, யாழ். கிளையின் ஆளுநர் சபை உறுப்பினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் )

அன்னாரது மறைவிற்காக எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள்,தொண்டர்கள்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளை.** (சி/54742)

## மரண அறிவித்தல்கள்

### அமரர் சூரியகாந்தி தவராசா

(முன்னாள் தலைவர் - பருத்தித்துறைப் பிரிவு, யாழ். கிளையின் ஆளுநர் சபை உறுப்பினர், இலங்கை செஞ்சிலுவை சங்கம்)



சூரியகாந்தி தவராசா 16.12.2007 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2007) செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிக்கு பருத்தித்துறை கல்லூரி வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பருத்தித்துறை. (சி/54741)

தகவல்:
**மனைவி, மக்கள்.**

### கந்தையா வாமதேவா

(இளைப்பாறிய திருமணப் பதிவாளரும் காணிப்பதிவு அலுவலரும்)



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு, கலட்டி, இல.25/4, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வாமதேவா 13.12.2007 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் அமரர்களான கலட்டியைச் சேர்ந்த கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் கந்தர்மடத்தைச் சேர்ந்த தில்லையம்பலம் - கனகம்மா (அமரர்கள்) தம்பதியினரின் மருமகனும் அமரர் காவேரியம்மாவின் பாசமிகு கணவரும், அமரர்களான திருமதி பாக்கியலெட்சுமி, இராசம்மா மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரஞ்சனா, சிவகுமார், சுலோஜனா ஆகியோரின் அன்புத் தந்தையும், குலசிங்கம், சுகந்தி, பிரபாகரன், ஸ்ரீ லங்காதேவி, ஸ்ரீ இந்திராதேவி, ஸ்ரீ சுசீலாதேவி, ஸ்ரீ கமலாதேவி, விவேகானந்தன், சகுந்தலாதேவி, லலிதாதேவி, பாலச்சந்திரன், இராமச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிரூபா, கேசவராம், நிரூஷன்ராம், தாட்ஷாயினி, ரம்யா, நிவேதா, கணன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2007) புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

49/8,சீனியர் ஒழுங்கை,
கலட்டி, யாழ்ப்பாணம். (69094)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா புவனேந்திரன்

புலோலி வடகிழக்கு, வராத்துப்பளையைச் சேர்ந்த முன்னாள் கணக்குப் பதிவியலாளர்(Book Keeper) நகரசபை, பருத்தித்துறை நேற்று(17.12.2007) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முறிவுநெரிவு வைத்தியர் செல்லையா - கண்மணி தம்பதியரின் ஏகபுத்திரனும் ரஜனியின் அன்புக் கணவரும் சுதன்(பிரான்ஸ்) தேவகி, தாரணி, சுதா(ஆசிரியை, யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி), சுகிர்தன், சுஜிர் தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசமூர்த்தி, கணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தருணேஸ், கீர்த்தனா, திருபரன், கம்சிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
வாராத்துப்பளை,
புலோலி வட கிழக்கு, பருத்தித்துறை.

### சின்னர் முருகேசு



கொழும்புத்துறையைச் சேர்ந்த சின்னர் முருகேசு நேற்று (17.12.2007) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சின்னம்மாவின் அன்புக் கணவரும் தயாநிதி, இரஜேஸ்வரி, இந்திராணி, கமலாம்பிகை(ஜேர்மனி), சாந்தினி மற்றும் காலஞ்சென்றவர்களான கோமதி, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவராசா, மயில்வாகனம், நடேசன், சாந்தசிவம்(ஜேர்மனி), தவராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை (18.12.2007) மு.ப. 10 மணிக்கு தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
மயில்வாகனம்(மருமகன் - பெயின்றர்)
60/1, ஏ.வி. றோட்,
கொழும்புத்துறை.

## மரண அறிவித்தல்கள்

### சின்னக்குட்டி சுப்பிரமணியம்



கொல்லன் கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது சுன்னாகம் தெற்கில் வசித்துவந்தவருமான சின்னக்குட்டி சுப்பிரமணியம் நேற்று திங்கட்கிழமை (17.12.2007) காலமானார்.

அன்னார் செல்லமுத்துவின் கணவரும், சிவலோகநாதன் (ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி), ஸ்ரீலோகநாதன் (கனடா), சத்தியலோகநாதன் (ஊழியர், குமாரசாமி ரெக்ஸ்), பாமதேவி (கனடா) ஆகியோரின் தந்தையும், நந்தினி, சந்திரவதனா(கனடா), வான்மதி (ஆசிரியை, பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம்), நடராஜா (கனடா) ஆகியோரின் மாமனாரும், கபிலன், குணேசன், கஜமதி, கஜந்தினி, மதுஹரி, கிருஷாந், தர்ஷன், சிவஷாந் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (18.12.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகேசபண்டிதர் வீதி, (புகையிரதக் கடவை அருகில்) சுன்னாகம் தெற்கு. (69096)

தகவல்:
குடும்பத்தினர்.

### சண்முகானந்தம் இராசமணி



நெல்லண்டை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகானந்தம் இராசமணி 14.12.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகானந்தத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பொன்னுச்சாமி, இந்திராணி, சின்னப்பிள்ளை மற்றும் செல்லக்கண்டு, தங்கரத்தினம், குமாரசாமி (மாஸ்ரர் - Colombo) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறிவிவேகானந்தராஜா (New Star Jewelers), வில்வராஜா (லண்டன்), தில்லைராஜன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற புவனேந்திரராஜா, கணேசராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகேஸ்வரி, லீலாவதி, மங்கையர்க்கரசி, கோணேஸ்வரி ஆகியோரின் மாமியும், சுதாகரன் (Mantec), சுதர்சினி, Dr.திருச்செல்வம் (லண்டன்), சிறிகரன் (Oxfarm), சுகந்தினி, நிமல்ராஜ், கோபிசங்கர், நிரஞ்சன், கரணி, சரயு, மயூரன், மைதிலி, கோகுலன், செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்வதர்சினி, செல்வதர்ஷன், செல்வதுரை ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

121 , 1/1, கே.கே.எஸ். றோட்,
பூநாறி மரத்தடி,
யாழ்ப்பாணம்,
T.P: 4590643 (69080)

தகவல்:
ச.சிறிவிவேகானந்தராஜா (மகன்),
(ஸ்டார் ஜுவலர்ஸ்).

### லோகநாதன் நிருஜா

ஜேர்மனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லோகநாதன் நிருஜா 15.12.2007 சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லோகநாதன் - சிவஞானாம்பிகை தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ் சென்ற பிரசாந்தன் மற்றும் நம்மியா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவராசா சிவானந்தன்
இல.16/3, விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (69084)

தகவல்:
சின்னத்துரை மகேந்திரநாதன்
(சித்தப்பா - சித்தா),
மூத்ததம்பி லேன், மானிப்பாய்.
ஜேர்மனி T.P.: 074516250693

### திருமதி இரத்தினம் தவமணி (மணி)



தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிட மாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் தவமணி 15.12.2007 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராமாசி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் கந்தசாமி (கொழும்பு), கனகச்சந்திரன் (சந்திரன் - கனடா), புவனேஸ்வரி (தேவி - கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மகேஸ்வரியின் (குஞ்சு - லண்டன்) மைத்துனியும் ரஜிதா (கொழும்பு), ரஜிகரன் (பவா - கனடா), சசிகலா (றொட்டியாலடி-உடுவில்), சசிகரன் (சுதா - கனடா), பிரபாகரன் (கரன் - கொழும்பு), விஜிதா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் கனகரத்தினம் (ராஜன் - டுபாய்), கிருபாலினி (கனடா), மோகனசுந்தரன் (மோகன் - றொட்டியாலடி), தயாபரி (கனடா), மௌலிகா (கொழும்பு), சிவராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் டிருசன், தயான்சி, சித்திராங்கன், விஷ்ணுகா, நிலா, அபினாஷ், சுபேகா, துவாரகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (69083)

தகவல்:
மோகன் குடும்பம்
ரஜி : 0112546358
மோகன் : 0773223323
கரன் : 0773206075

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் சிமெந்து தட்டுப்பாடு; விலையும் திடீரென அதிகரிப்பு!

நவாலி,டிசெ.18

குடாநாட்டில் சிமெந்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் அதன் விலையும் திடீரென பக்கெற்றுக்கு 2 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

சிமெந்திற்கான விலையை ஆயிரத்து 100 ரூபா என அரச அதிபர் நிர்ணயம் செய்து ஊடகங்கள் மூலம் அறிவித்த பின்னரே சிமெந்திற்குக் குறிப்பாகத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சிமெந்திற்கு ஏற்பட்ட திடீர் தட்டுப்பாட்டால் அரச கட்டட ஒப்பந்தகாரர் பலர் இவ் வருட இறுதிக்குள் வேலைகளை முடிக்க முடியாது திண்டாடுவதாகத் தெரிவிக்கின்றனர்.

கட்டட வேலைகளைச் செய்துவரும் பொது மக்களும் சிமெந்து தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பால் வேலைகளை இடை நிறுத்தியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர். (202-100)

## தென்மராட்சி பி. செயலகத்தில் 3 முகாமைத்துவ உதவியாளர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.18

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு மூன்று புதிய முகாமைத்துவ உதவியாளர்கள் பொதுநிர்வாக அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி மூவரும் கடமைகளைப் பொறுப்பேற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(202-207)




# வளிமண்டலத் திணைக்களத்தின் அறிவித்தல்களில் தமிழ்மொழி தவிர்க்கப்படுவதாக விசனம்

குருநகர்,டிசெ.18

இலங்கை வளிமண்டலத் திணைக்களம் அரச அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கும் அறிவுறுத்தல்களில் தமிழ் மொழி தவிர்க்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட திணைக்களத் தலைவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமிழ் பிரதேசங்களிலுள்ள திணைக்களங்களிற்கேனும் அறிவுறுத்தல்கள் தமிழ் மொழியில் அனுப்பிவைக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி திணைக்களம் அனுப்பி வைக்கும் அறிவுறுத்தல்கள் சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

குறிப்பாகக் கடந்த வியாழக்கிழமை இலங்கையில் புயல் அபாயம் உருவாகியுள்ளது என்ற அறிவித்தல் யாழ்.மாவட்ட அரச அலுவலகங்களுக்கு தொலைநகல் (பக்ஸ்) மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்த அறிவித்தல் சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் மட்டுமே காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-51)

# பரு.சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.18

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் குருளைச்சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவமும் அதிபர் அ.சா.சூரியகுமார் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

குருளைச் சாரணர்களுக்குச் சாரண ஆசிரியை திருமதி தெய்வேந்திரம் சின்னம் சூட்டியதைத் தொடர்ந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில்பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் பேசுகையில் -

இப்பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு 20 மாணவர்கள் தோற்றி 5 மாணவர்கள் சித்தியடைந் துள்ளனர். 4 மாணவர்கள் நூறுக்கு மேற்பட்ட புள்ளிகளைக் பெற்றுள்ளனர். இதை நோக்கும்போது இப் பரீட்சையில் 9 மாணவர்கள் சித்தியடைந்தாகக் கருத்திற்கொள்ளவேண்டும்.

இப்பாடசாலையின் கட்டடங்கள் மிக நெருக்கமாக அமைந்துள்ளன. காற் றோட்ட வசதி இல்லை. இக்கட்டடங்கள் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கான உகந்த சூழல்களைக் கொண்டிருக்கவில்லை. இதனை நாம் நன்கு உணர்கிறோம். எதிர் காலத்தில் இக்கட்டடங்களை அப்புறப் படுத்தி கற்றல், கற்பித்தலுக்கான வசதிகளைக் கொண்ட கட்டடங்களை உருவாக்க முயற்சிகளை எடுத்துவருகிறோம் -என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் ந.குணசீலன், பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளை உத்தியோகத்தர் வ.மகிபன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

பாடசாலைச் சமூகத்தால் வழங்கப்பட்ட நிதி உதவிகளும் மக்கள் வங்கியின் பரிசுப் பொருள்களும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. (1-160)

# யோகா கேந்திராவில் தியான வகுப்புகள்

யாழ்ப்பாணம்,டிசெ.18

சிவலிங்க யோகா கேந்திராவின் ஏற்பாட்டில் யோகாசன தியான வகுப்புகள் இம்மாதம் 24 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணி தொடக்கம் கந்தர்மடம் வேதாந்த மடத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தப் பயிற்சியில் பங்குகொள்ள விரும்புபவர்கள் அன்றைய தினம் மாலையில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சியில் இருபாலரும் பங்குபற்றலாம். தினமும் மாலை 4.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை பயிற்சி இடம்பெறும். (1)

# ஒளி விழாக்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.18

கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு "ஒளிவிழா" நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் கரித்தாஸ் - கியுடெக் அமைப்பின் இயக்குநர் வண.பிதா சி.வி. ஜெயக்குமார் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (202-51)

* * *

வலி.தென்மேற்கு,டிசெ.18

வலி.தென் மேற்கு பிரதேச சபை நலன் புரிச்சங்கம் நடத்தும் ஒளிவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (202-135)

# பிரான்பற்று உப தபாலகம் 24 வருடங்களின் பின் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.18

பிரான்பற்று உப அஞ்சல் அலுவலகம் 24 வருடங்களின் பின் கடந்தவாரம் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு- பிரதி அஞ்சல் மா அதிபர் வீ. குமரகுரு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு வைபவரீதியாகத் திறந்து வைத்தார்.

பண்டத்தரிப்பு - பிரான்பற்று மக்கள் நலன் புரிச் சங்கத்தின் தலைவர் சி.மகேந்திரம் தலைமையில் திறப்பு விழா இடம்பெற்றது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.தென் மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூ.வரதலிங்கம் அஞ்சல் உப அலுவலக பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

பிரான்பற்று உப அஞ்சல் அலுவலகம் கடந்த 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்துடன் மூடப்பட்டது.

இதன் பின்னர் 24 வருடங்களின் பின்னர் அபிவிருத்தி முன்னெடுப்பின் கீழ் உப அஞ்சல் அலுவலகம் அமைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் ஆசியுரையை பிரான் பற்று பெரியவளவு ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான சிவஸ்ரீ. இ. உலகேஸ்வர குருக்கள் வழங்கினார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் வீ.குமரகுரு விரைவில் பண்.பிரான்பற்று உப அஞ்சல் அலுவலகம் தரம் உயர்த்தப்பட்டு பக்ஸ் மற்றும் தொலைபேசி வசதி வழங்கப்படும் - என்றார்.

சிறப்பு விருந்தினர் வரிசையில் யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ். ஜெபரட்ணம், அஞ்சல் அலுவலக நிர்வாக அதிகாரி வி. சுப்பிரமணியம், பிரதேச செயலர் ரூ.வரதலிங்கம்-

வேலணை பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ. ரமேஷ்(ச.நீ), யாழ். அஞ்சல் அலுவலக சிரேஷ்ட பதவி நிலை அதிகாரி ஏ.சுந்தரலிங்கம் ஆகியோர் உரை யாற்றினர்.

கௌரவ விருந்தினர் வரிசையில் பண்டத்தரிப்பு தபால் அதிபர் சி. சுப்பிரமணியம், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.ச. பொது முகாமையாளர் ஆ. நாகராசா, ஓய்வுபெற்ற கிராம அதிகாரி ச.சிவகுமார், மக்கள் நலன்புரிச் சங்க அலுவலர் அ. சின்னராசா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

புதிதாக உப அஞ்சல் அதிபராக நியமனம் பெற்ற கி. கிருஸ்ணலிங்கம் கடமைகளை வைப வரீதியாக பொறுப்பேற்றார்.

(1-95-135)



இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி பெற்றிருந்த பருத்தித்துறை, மணல் ஒழுங்கையைச் சேர்ந்த தே. மரியதாஸ் அகால மரணமடைந்ததை அடுத்து இழப்பீட்டுத் தொகையாக 3 லட்சத்து 90 ஆயிரத்து 378 ரூபாவை காப்புறுதி நிறுவனம் வழங்கியுள்ளது.

இழப்பீட்டுத் தொகைக்கான காசோலையை அவரது தயாரிடம் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சிரேஸ்ட காப்புறுதி அமைப்பாளர் பெ.ஜெனியூட் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

அருகில் காப்புறுதி ஆலோசகர்களாகிய கி.செல்வயோகன், ம.சுமன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# வலிகாமத்தில் பெய்துவரும் பெருமழையால் வழுக்கையாற்றுக் குளங்கள் நிரம்பியுள்ளன

வலி .தென்மேற்கு,டிசெ.18

கடந்த வாரம் முதல் வலிகாமத்தில் பெய்துவரும் பெரு மழையால் வழுக்கையாற்றுப் படுகைப் பிரதேசத்திலுள்ள பல குளங்கள் நிரம்பியுள்ளன.

கந்தரோடைக் குளம், சங்குவேலிக் குளம், கேலிங்காமம, கிராய்க் குளம், மருதடிக்குளம், முதலியார் குளம் உட்பட இப் பிரதேசத்திலுள்ள குளங்கள் அனைத்தும் நிரம்பியுள்ளன.

இதனால் இக் குளங்கள் அண்டியுள்ள வயல் காணிகளில் நெற்பயிர்கள் செழித்து வளரும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இப்பிரதேசத்திலுள்ள தடுப்பு அணைகளினதும் மதகுகளினதும் துருசுகளில் வழுக்கையாற்றிலிருந்து வரும் வெள்ள நீர் வீணாக வழிந் தோடுவதை தடுத்து நிறுத்துவதற்காக நீர்ப்பாசன திணைக்களம் மண்மூட்டைகளை அடுக்கி வைத்துள்ளது.

இம் முறை உர வகைகள் யாவும் உரிய காலத்தில் கிடைக்கப் பெற்றதால் விவசாயிகள் திருப்தி அடைந்துள்ளனர். உரம் போடப்பட்டதால் பயிர்கள் பச்சை பசேலென நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் உள்ளதாகவும் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (202-135)

# கல்வியில் சாதனை நிலைநாட்டிய வடமராட்சி மாணவர்கள் கௌரவிப்பு

பருத்தித்துறை,டிசெ.18

வடமராட்சிப் பிரதேசத்தில் கல்வியில் சாதனை நிலைநாட்டிய 317 மாணவர்களை வடமராட்சி வலயக் கல்வி அலு. வலகம் கௌரவித்துள்ளது.

இக் கௌரவிப்பு நிகழ்வு இலங்கை வங்கியின் அனுசரணையுடன் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

வலயக்கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் இலங்கை வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் ஏ.அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

ஆங்கிலதினப் போட்டியில் வெற்றியீட்டிய 150 மாணவர்களும், தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டிய 148 மாணவர்களும், கணித - விஞ்ஞான போட்டியில் வெற்றியீட்டிய 34 மணவர்களும்-

சமூகக்கல்விப் போட்டியில் வெற்றியீட் டிய 50 மாணவர்களும், திருக்குறள் போட்டியில் வெற்றியீட்டிய 15 மாணவர்களும், தையல் - மனைப்பொருளியல் போட்டியில் வெற்றியீட்டிய 20 மாணவர்களும் இந்நிகழ்வில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

(202-218)

# வலி.மேற்கில் முன்பள்ளிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.18

வலி.மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பிரிவைச் சேர்ந்த முன்பள்ளிகளின் மாணவர்களுக்கு சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பற்பசையும் தூரிகைகளும் யாழ்.சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக மண்டபத்தில் நடைபெற்றபோது இப்பிரிவில் இயங்கிவரும் 16 முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

முன்பள்ளிச் சிறார்களுக்கு பல் துலக்குவது மற்றும் பற்களைப் பாதுகாப்பது போன்ற பயிற்சிகள் வழங்குவதற்கான செய்முறைப் பயிற்சிகள் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இப்பயிற்சிக் கருத்தரங்கில் வழங்கப்பட்டன.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பதில் பொறுப்பதிகாரி கே.தெய்வேந்திரம், பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் என்.நிர்மலானந்தன் ஆகியோர் இதில் கலந்துகொண்டு இதற்கான பயிற்சிகளையும் அறிவுரைகளையும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கினர். (1-135)

# தீவகப் பிரதேசத்தில் தலைமைத்துவப் பயிற்சி

தீவகப் பிரதேசத்திற்குட்பட்ட வகையில் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்கான பயிற்சி நெறி வேலணை ப.நோ. கூ.சங்க மண்டபத்தில் நேற்றும் இன்றும் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெற்று வருகின்றது.

முதல் நாள் உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பங்கேற்பு, திட்டமிடல் தொடர்பாக சனசமூக அபிவிருத்தி அலுவலர் செ. தவநாயகமும்-சமூக அபிவிருத்தி தொடர்பாக சனசமூக அபிவிருத்தி அலு வலர் [illegible] - கிராம மட்ட நிறுவனங்களில் ஜனநாயக பண்புகளை வளர்த்தல் தொடர்பாக சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அதிகாரி வே. கந்தசாமியும் விரிவுரையாற்றவிருந்தனர்.

இரண்டாம் நாளில் நல்லாட்சி தத்துவங்கள் தொடர்பாக சனசமூக அபிவிருத்தி அலுவலர் செ: தவநாயகமும்-

திட்டமிடப்படாத நகரம்யமாக்கலினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள், நிலப்பாவனை, குடியிருப்புகள், சந்தைகள், போக்குவரத்து, சுகாதாரம் தொடர்பாக சனசமூக அபிவிருத்தி அலுவலர் த. கிருபாகரனும்- சுற்றாடல் பாதுகாப்பும் உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்பு தொடர்பாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம. வசந்தகுமாரும் விரிவுரையாற்றவுள்ளனர். நிகழ்வின் இறுதி நாளில் பயிற்சி பற்றிய மதிப்பீடு இடம்பெறும். (1-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்காவற்றுறை மீனவர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரங்கள்

குருநகர், டிசெ.18

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறையில் கடற்றொழில் செய்யும் ஐந்து மீனவர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என ஊர்காவற்றுறை கடற்றொழில் பரிசோதகர் பி.அன்றூ தெரிவித்தார்.

இதே நேரத்தில் தம்பாட்டிக் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு மீனவர்களுக்குக் கடற்றொழிலாளர் ஓய்வூதியம் அண்மையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-51)

## முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு சனியன்று

யாழ்ப்பாணம், டிசெ.18

கொக்குவில் லயன்ஸ் கழகம் கல்விச் சேவைத்திட்டத்தின்கீழ் நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கவுள்ளது.

இக் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக லயன் க.மு.பத்மநாதன், லயன் சீமாட்டி பத்மாதேவி தம்பதியர் கலந்து கொள்வர். (202)

# இரவு 10 மணிக்குப்பின் ஒலிபெருக்கிப் பாவனை தடையை எக்காரணம் கொண்டும் நீக்க முடியாது

## மதவழிபாட்டுக் காலங்களில் விசேட அனுமதி



கொழும்பு, டிச.18

இரவு நேரத்தில் பத்துமணிக்குப் பின் ஒலிபெருக்கிப் பாவனை மீது விதிக்கப்பட்டுள்ள தடையை எக்காரணம் கொண்டும் நீக்க முடியாது. நீதிமன்றத் தீர்ப்பிற்கு மாறாக என்னால் எதையும் செய்ய முடியாது- என்று சுற்றாடல் வளத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

ஒலிபெருக்கிப் பாவனை மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கும்மாறு- தடையை பண்டிகைக் காலங்களிலாவது இடைநிறுத்தி வைக்கும்படி ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைகளை அமைச்சர் முற்றாக நிராகரித்தார்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற சபை ஒத்திவைப்புவேளை, ஐ.தே.க உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஒலிபெருக்கி மீதான தடையை நீக்கக்கோரி பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

ஒலிபெருக்கிப் பாவனைத் தடையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள கலைஞர்கள் ஜனாதிபதியை சந்தித்த போது 14ஆம் திகதிக்கு முன் இதற்கு ஒரு தீர்வு காணப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார். ஆனால், இதுவரை எதுவித நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தற்போது டிசம்பர் மாதம் முதல் ஏப்பிரல் வரை தொடர்ச்சியாக இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய நிகழ்வுகள் இடம்பெறும். அப்போது ஆங்காங்கே சங்கீத நிகழ்வுகளும் இசைக்கச்சேரிகளும் நடத்தப்படுவது வழமை. இதனையே தொழிலாகக் கொண்ட கலைஞர்கள் தொழில்நுட்பவியலாளர்கள் அரங்க அமைப்பாளர் கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**ஆலயங்களில் ஆராதனை நடத்தமுடியவில்லை**

ஆலயங்களிலும் இரவுநேர ஆராதனைகளை நடத்த முடியாமல் உள்ளது. எனவே, இச் சந்தர்ப்பத்திலாவது இத்த டையை நீக்கி பாதிக்கப்பட்ட கலைஞர் களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என முன்மொழிந்தார்.

ஜே.வி.பி உறுப்பினர் ஏக்கநாயக்க வழிமொழிந்தார். எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கையை அமைச்சர்களான பீலிக்ஸ் பெரேரா, சரத் குணவர்த்தன ஆகியோரும் ஆதரித்துப் பேசினார்.

கிறிஸ்மஸ் காலத்தில் ஆலயங்களில் கிறிஸ்தவ கீதங்கள், கரோல் பாடல்கள் என்பன நடத்தப்படுவது வழமை. நாங்கள் இசையுடனேயே இறைவனை ஆராதிக்கின்றோம்.

ஆனால், இப்போது ஒலிபெருக்கி இல்லாததால் துருப்பில்லாத ஓடம்போல் ஆலயங்கள் காணப்படுகின்றன. எனவே, ஒலிபெருக்கி மீதான தடையை பண்டிகைக் காலத்திலாவது நீக்கவேண்டும் எனக் கூறினார்.

இருதரப்பினரும் இந்தக் கோரிக்கையை அமைச்சர் பரீசிலனை செய்யவேண்டும். இது விடயமாக சட்டமா அதிபருடன் பேசி ஒரு சுமுகமான தீர்வு காணவேண்டும் என சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார ஆலோசனை தெரிவித்தார்.

ஆனால், இவ் விடயத்தில் என்னால் ஒன்றும் செய்ய முடியாது நீதிமன்றத் தீர்ப்பை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் -

இதேவேளை, இஸ்லாமியர்கள் எதிர்நோக்கும் ஹஜ்பெருநாள் உட்பட தொடர்ந்து வரும் ஆலய உற்சவங்கள் மதவழிபாடுகள் என்பவற்றுக்கு விசேட அனுமதி வழங்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது -

பொலிஸ்மா அதிபர் பிரதி பொலிஸ்மா அதிபர்கள் ஊடாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார். எனவே, மத வழிபாடுகளுக்கு இடையூறுகள் ஏதும்வராது. அவர்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்யலாம் -என்று அமைச்சர் கூறினார். (சி)

# இலங்கையில் தொடரும் பிரச்சினை தமிழகத்தில் அரசியலாக்கப்படுகிறது

## மத்திய அமைச்சர் இளங்கோவன் குற்றச்சாட்டு



சென்னை,டிச.18

இலங்கையில் தொடரும் இனப் பிரச்சினையை சிலர் தமிழகத்தில் அரசியல் மயப்படுத்துகிறார்கள் எனக் குற்றஞ்சுமத்தியிருக்கும் மத்திய அமைச்சர் இளங்கோவன், விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் நபர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார்.

எஸ்.ஆர்.எம்.இதழியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழா சென்னையில் நேற்று முந்தினம் இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இலங்கைப் பத்திரிகையாளர் 19 பேருக்கு பட்டம் வழங்கிக் கௌரவித்த அமைச்சர் அங்கு மேலும் உரை நிகழ்த்துகையில் -

"இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும். கத்தி, துப்பாக்கி மூலம் இல்லாது இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முடியும். அதற்கு பத்திரிகையாளர்கள் உயர்ந்த இலட்சிய உணர்வோடு பணியாற்ற வேண்டும். அப்போது கத்தியின்றி-இரத்தமின்றி -தீர்வு காணமுடியும். இந்தியாவில் நீங்கள் தெரிந்துகொண்ட விடயங்கள் உங்கள் தொழிலுக்கு நிச்சயம் பயன்படும். இந்தப் பயிற்சியின் மூலம் வலுப்பெற்றுள்ள உங்களது பேனா, அமைதி என்ற உயரிய இலட்சியத்தை அடைய பயன்பட வேண்டும்.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழகத்தில் அவர்களுக்கு ஆதரவாகப் பேசி சிலர் அதை அரசியலாக்கி வருகின்றனர்.

சமீபத்தில் கடற்புலிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மோட்டார் படகு அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. காவல் துறை கடும் எச்சரிக்கை விடுத்த பிறகும் புலிகளுக்கு உதவிவருபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

## கூட்டம்

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று செவ்வாய் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீவகம் வடக்கு உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

## வட- கிழக்குக் கடலோரப்பகுதியில் கடும் காற்றும் மழையும் நீடிக்கும்

கொழும்பு,டிசெ.18

வடக்கு, வட கிழக்கு கடற்பிரதேசத்தில் அடுத்த இருபத்து நான்கு மணித்தியாலத்துக்கு மழை அல்லது இடியுடன் கூடிய மழை அவ்வப்போது பெய்ய வாய்ப்புண்டு என்று இலங்கை காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. கிழக்கு மற்றும் மேற்குக் கடற்பகுதியிலும் இதே காலநிலை நீடிக்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

வடக்கு - கிழக்குத் திசையில் கடும் காற்று மணிக்கு 30 - 40 கி.மீ.வேகத்தில் வீசக்கூடும். இதன்வேகம் வட கிழக்கு மற்றும் மேற்கு திசையில் 50 இல் இருந்து 60 கி.மீற்றராக அதிகரிக்கக்கூடும்.

வடக்கு, கிழக்கு மேற்கு மற்றும் மன்னார் குடாப்பகுதியில் கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. நேற்று மதியம் 12 மணியிலிருந்து தொடரும் 24 மணிநேரத்திற்கு இந்தக் காலநிலை நீடிக்கும் என்று இலங்கை காலநிலை அவதான நிலையம் அறிவித்தது.

இதேவேளை, சென்னை தமிழ் நாடு காலநிலை அவதான நிலையத்தின் அறிவித்தலின்படி வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழமுக்க தாழ்வுநிலை காரணமாகத் தமிழ்நாட்டையொட்டிய கடற்பகுதியில் கடும் மழை பெய்யும் வாய்ப்பிருப்பதாகத் தெரியவருகின்றது. (ப)

## முன்பள்ளிச் சிறாருக்கு பற்பசை, தூரிகை

உடுப்பிட்டி, டிசெ.18

வடமராட்சியிலுள்ள முன்பள்ளிகளில் கல்வி கற்கும் சிறுவர்களுக்குப் பற்பசை, தூரிகை என்பன வழங்கப்பட்டு வருகின்றது.

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினர் அவற்றை வழங்கி வருகின்றனர். (202-155)

## ஆனைக்கோட்டையில் பயிர்களைக் காக்க வேலிகள் அமைப்பு

நவாலி,டிசெ.18

ஆனைக்கோட்டை கல்லுண்டாய் பகுதி வயல்களிலுள்ள நெற்பயிர்களைக் கட்டாக்காலி கால்நடைகளிலிருந்து காப்பாற்றுவதற்காக வயல் சொந்தக்காரர்கள் வேலிகளை அமைத்து பயிர்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் பயிர்கள் செழித்து வளர்ந்து வரும் நிலையில் கட்டாக்காலி கால்நடைகள் வயல்களுக்குள் புகுந்து பயிர்களை ந[illegible] இதனால் வி[illegible] காப்பாற்றுவதற்காக பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். (100)


ஸ்ரீ ராம ஜெயம்



யாழ். வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்

20.12.2007 வியாழன்

**நாராயணன் அடியார்களே!**

*ஈழத்து திருப்பதி எனப் போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் விரதங்களுள் மிகவும் மகத்துவம் மிக்க ஏகாதசியில் பெரியதும் சிறப்பானதுமான சுவர்க்கவாயில் ஏகாதசிப் பெருவிழா நிகழும் சர்வசித்து வருடம் மார்கழி மாதம் 4ஆம் நாள் 20.12.2007 வியாழக்கிழமை நிகழவுள்ளது.*

**அதிகாலை**
3.45 மணி சுப்ரபாதம்
4 மணி திருப்பள்ளியெழுச்சி
4.15 மணி மூலவர் அபிஷேகம்
5.15 மணி திருவனந்தல் பூசை
திருப்பாவை ஓதுதல்
5.45 மணி உதய பூசை
6 மணி சுவர்க்க வாயில் தரிசனம்
சுவாமி வசந்த மண்டபத்திற்கு எழுந்தருவல்

**காலை**
9 மணி மூலவர் அபிஷேகம்
10.15 மணி காலைசந்திபூசை
10.45 மணி ஆதி வேங்கடேசர் உள்வீதியுலா

**மாலை**
4 மணி சாயரட்சை பூசை
4.15 மணி இரண்டாம் கால பூசை
5 மணி வசந்த மண்டப பூசை
சுவாமி திரு வீதியுலா (கருட சேவை)

**காலை 6 மணி சுவர்க்கவாயில் தரிசனத்தைத் தொடர்ந்து அன்று பகல் முழுவதும் அடியார்கள் அர்ச்சனை வழிபாடுகள் செய்யலாம்.**

**இரவு 7 மணி முதல் அதிகாலை 3.30 மணிவரை கூட்டுப்பிரார்த்தனை, இசை ஆராதனை, நற்சிந்தனை ஆகியன நடைபெறும்.**

**துவாதசி உற்சவம்**
மார்கழி மாதம் 05ஆம் நாள் 21.12.2007 வெள்ளிக்கிழமை 3.30 மணி சுப்ரபாதம்
அதிகாலை 3.50 மணி திருப்பள்ளியெழுச்சி 4 மணி மணி மூலவர் அபிஷேகம்
5 மணி திருவனந்தல் பூசை, 5.30 மணி உதயபூசை , 5.45 மணி வசந்தமண்டப பூசை.

**தொடர்ந்து சுவாமி வீதியுலா இடம்பெறும்**

*அடியார்கள் சுவர்க்க வாயில் தரிசனம் கண்டு அபிஷேக பூசை உற்சவங்களில் கலந்து ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளின் திருவருளினால் ஸ்ரீலக்ஷ்மி விலாஸ சம்பன்னராக வாழ்வீர்களாக.*

நாட்டின் சூழ்நிலை கருதி நிகழ்ச்சி நேரங்கள் மாற்றப்படலாம்.

**தேவஸ்தான ஆதீன மகாசபை.**

**ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்,**
மணிக்கூட்டு வீதி, வண்ணை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 2476

(69090)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIC
The Hands that Protect
Life Insurance Corporation (Lanka) Ltd.

# சாதனையாளர் சிறப்பு மலர்



எல்.ஐ.சி லங்கா எப்பொழுதும் அதன் யாழ்ப்பாணக் கிளையின் சாதனைகளால் தொடர்ந்து பெருமை அடைந்து வருகின்றது. எனினும் இவ்வருடம் யாழ்.கிளையின் சாதனை ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு மகுடம் சூட்டுகின்றது. குறிப்பாக கடந்த ஒருமாதத்தில் எமது யாழ்.கிளை ஒரு சரித்திரப் பதிவை ஏற்படுத்தும் அளவுக்கு உழைத துள்ளமையை இட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன். சாதனைகள் ஒவ்வொன்றும் தனிமனித உழைப்பின் வெளிப்பாடே அன்றி, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் உரிமை இல்லை என்பதற்கு எமது யாழ்.கிளையின் ஒவ்வொரு ஊழியர்களின் கடின உழைப்பும் சான்று பகர்கின்றது. எந்த சூழ்நிலையிலும் காப்புறுதி சேவையினை யாழ்.மக்களுக்கு திறம்பட ஆற்றி வரும் யாழ்ப்பாணக் கிளையின் விற்பனை மேற்பார்வையாளர்கள், ஆலோசகர்கள், மற்றும் அலுவலகப் பணியாளர்களையும் ஒன்றிணைத்து சரியான இலக்கை தேர்ந்து எடுத்து வழி நடத்திவரும் எமது யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் திரு. வித்தியாசங்கர் சர்மா அவர்களையும் இததருணத்தில் பாராட்டி மகிழ்கிறேன்.

திரு. இரவிசங்கர்பிரசாத்,
*பிரதம நிறைவேற்று அதிகாரி,*
*மற்றும் நிர்வாக பணிப்பாளர்.*



எமது வரையறுக்கப்பட்ட ஆயுட்காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இலங்கை) நிறுவப்பட்டு 5ஆவது ஆண்டைப் பூர்ததி செய்யும் இத்தருணத்தில் கடந்த கார்த்திகை மாதத்தில் எங்கள் நிறுவனம் எந்த மாதமுமே செய்யாத முதல் வியாபாரக் கட்டணமாக 21.8 மில்லியன் ரூபா புது வியாபாரத்தை செய்திருக்கின்றது. இதில் 50% எமது யாழ். கிளை காரியாலயம் செய்து இருக்கின்றது. இதன் மூலம் எமது யாழ். கிளை முகாமையாளர் திரு. சர்மா அவர்கள் ஒரு பெரிய சாதனையைப் படைததுள்ளார். அவருக்கும் அவரது சக ஊழியர்களுக்கும் பொது முகாமையாளர் என்றவகையில் எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிப்பதோடு அவர்கள் மேலும் தொடர்ந்து பல வெற்றிகளைப் பெறுவார்கள் என்று நம்புகின்றேன்.

திரு.எஸ்.எஸ். மதியாபரணன்,
*பொது முகாமையாளர்.*



எமது யாழ்ப்பாணக்கிளை இந்த ஆண்டின் ஆரம்பம் முதற் கொண்டு எமது முதல் தரக்கிளையாகத் திகழ்ந்து வருவது ஒரு சிறப்பம்சமாகும். இதற்காக இந்தக் கிளையைச் சார்ந்த ஊழியாகள் கடுமையாகப் போராடி உழைத்துள்ளமையை இந்த சாதனை மலர் மூலம் வெளி உலகிற்குத் தெரிவிப்பதை எனது கடமை என உணர்கிறேன். இதன் பயனாக இன்று பல சாதனை வீரர்களை எல்.ஐ.சி லங்கா பெற்றுக் கொண்டுள்ளது. 2007இன் இறுதியில் இந்த சாதனை வீரர்கள் சாதித்தமை ஒருபடி என்றால் 2008 இல் இதனை பல மடங்குகளால் அதிகரிக்க இவர்கள் இன்று சபதம் செய்ய வேண்டியது அவர்களின் கடமை ஆகும். இந்தச் சாதனை வீரர்களை எமக்குத் தந்துள்ள இவர்களின் பெற்றோர்களுக்கும் உறவுகளுக்கும் இவர்களின் சாதனை நிச்சயம் பெருமை தந்திருக்கும் என்பதே எனது நம்பிக்கை. இவற்றுக்கெல்லாம் மேலான எல்.ஐ.சி லங்காவின் காப்புறுதி வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் எமது யாழ்.கிளையின் இச்சாதனை மலர் ஊடாக என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு .எம். சேகா,
*சந்தைப்படுத்தல் முகாமையாளா.*

*"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவுந் தமபோற் செயின்"*




என்னும் பொய்யா மொழிப்புலவரின் வாக்கைப் போல யாழ். மக்களுக்கு காப புறுதித்துறையின் ஊடாக நற்சேவை புரிந்து சமுதாய முன னேற்றத்திற்கும் தம் வாழ்வின் முன்னேற்றத்திற்கும் கடுமையாக உழைத்து இன்று வெற்றி வீரர்களாக வெளி நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளும் எனது கிளையின் சகோதர,சகோதரிகளுக்கு இத யபூர்வமான என் பாராட்டுக்களை இச்சிறப்பு மலரில் தெரிவித்து மகிழ்கின்றேன்.

இன்றைய இளைய சமுதாயம் சந்தர்ப்பம் கிடைத்தால் சாதனை படைப்பர் என்பதற்கு இவர்களின் வெற்றி முன்னுதாரணம் ஆகியுள்ளது. இவர்களுக்கு காப்புறுதித்துறையில் பணியாற்ற நாம் சந்தர்ப்பம் தந்திருந்தாலும் இவர்களின் வாழ்க்கைக்கு விளக்கேற்றிவைதத எல்.ஐ.சீயின் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் என் அன்புடன் கூடிய நன்றிகளை சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

திரு.வித்யாசங்கர் சர்மா,
முகாமையாளா,
யாழ்ப்பாணம்.

# சாதனையாளர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்


சிரேஸ்ட விற்பனை அதிகாரி எம்.கோபிதாசன்


சிரேஸ்ட விற்பனை மேற்பார்வையாளர் எஸ்.பாஸ்கரன்


சிரேஸ்ட விற்பனைமேற்பார்வையாளர் ரி.ஆனந்தராசா


விற்பனை மேற்பார்வையாளர் எம்.பிரதீப்


விற்பனை மேற்பார்வையாளர் என்.புஸ்பலதா


விற்பனை மேற்பார்வையாளர் எம்.ஜெயரூபன்


விற்பனை மேற்பார்வையாளர் ஆர்.சுஜாத்தா


விற்பனை மேற்பார்வையாளர் கே.கிருபானந்தன்

## யாழ்.கிளையில் இருந்து பாங்கொக் பயணமாகும் LIC யின் காப்புறுதி ஆலோசகர்கள்


ஏ.ஜனார்த்தனன்


ஏ.சண்முகநாதன்


இ.துரைசிங்கம்


எவ்.ஜீன்சிந்துஜா


கே.ஜனனி


கே.ஜீவானந்தன்


கே.காவேரி


கே.செல்வராசா


எம்.கண்ணதாசன்


என்.சி.துஷிதா


ரி.ஆதவன்


எஸ்.நிகிலா


எஸ்.சசிகலா


எஸ்.சிவமலர்


எஸ்.ரொரூபன்

இவர்களுடன்
சுரேஷ்

**L.I.C. (லங்கா) லிமிற்றெட்., கொழும்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

உரிமையாளர் ஒருசில தினங்களில் வெளிநாடு செல்ல இருப்பதால் புதிய Singer Washing Machine (Automatic) மற்றும் புதிய A.C. அத்துடன் T.V. என்பன விற்பனைக்குண்டு.

உடன் தொடர்புகளுக்கு:
**077 6265629, 021 222 3850, 077 9365991**

(68056) கைதடி.



**இதோ!**

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/54731) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)


## ஈரவிழிகளுடன் மூன்றாண்டு நினைவலைகள்



மண்ணின் மடியில் 25 ★ ★ 06 ★ ★ 1955

இறைவன் அடியில் 19 ★ ★ 12 ★ ★ 2004

### அமரர் கிட்டிணன் தர்மலிங்கம்

(ஆசிரியர் - யா/ஞானசாரியார் கல்லூரி, கரவெட்டி)

*எம்!*
*இதயத்தின் ஆத்மாவே நீங்கள் எங்கே?*
*எம்மைப் பிரிந்து போகத் துணிந்தீரோ இங்கே - எம்*
*உதயத்துச் சூரியனே நீங்கள் எங்கே? - உங்கள்*
*ஒளியின்றி நாமெல்லாம் இருளில் இங்கே*

*விதி செய்த சதியால் நாங்கள்*
*நெருப்பறிந்து துடிக்கும் உயிராய் ஆனோம்!*
*பாதக வாழ்வு கண்டோம்*
*வேதனை சுமந்த கப்பல்*
*வேகமாய்ச் சென்றதால்*
*ஆண்டுகள் மூன்றாகிவிட்டன...*
*ஆறாது எம் துயரம் - அப்பாவே!*
*உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.*
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*முடக்காடு,*
*நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.* (69079) **குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் யோகர் அருளானந்தம் (துரை ஐயா)

தோற்றம் 17.09.1935 — மறைவு 18.11.2007



**ஆலம் விழுதுகள் போல் உறவுகள்**
**ஆயிரம் இருந்துமென்ன ஐயாவே!**
**வேரென நீரிருந்தீர்கள்**
**அன்பால் எமைக் காத்து ஆசையாய்**
**எமை வளர்த்து அவனியில் நாமுயர**
**வழி காட்டி நின்றவரே மாதம் ஒன்று**
**சென்றாலும் ஆறாது ஐயா எம் இதயம்.**

இன்று (18.12.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.4, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (68966) **குடும்பத்தினர்.**

# மலேசியாவாழ் இந்தியத் தமிழர்கள் இப்போது உரிமை கேட்பது ஏன்?

## அந்நாட்டு அமைச்சர் சென்னையில் கேள்வி

மீனம்பாக்கம்,டிச.18

ஐம்பது வருடகாலம் மலேசியாவில் வாளாவிருந்து வரும் இந்திய வம்சாவளியினர் இப்போது மட்டும் உரிமை கேட்பது ஏன் என அந்நாட்டு அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்திய வம்சாவளி அமைச்சரான டத்தோ ஸ்ரீ.ராஜூ சென்னையில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு வினாவெழுப்பினார்.

''மலேசிய மக்களிடையே எந்த வேறுபாடும் இல்லை. அனைவரும் ஒற்றுமையாகத்தான் வாழ்கிறோம்'' என்றும் சென்னை வந்த மலேசியக் கல்வி அமைச்சர் ராஜூ குறிப்பிட்டார்.

மலேசியாவின் பராக் மாநில முதல்வர் டத்தோஸ்ரீ டி.ராஜா, கல்வி அமைச்சர் டத்தோ ராஜூ ஆகியோர் தலைமையிலான குழுவினர் சென்னை வந்துள்ளனர். விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசிய டத்தோ ஸ்ரீ டி.ராஜா, ''பராக் மாநிலத்தில் புதிய பல்கலைக்கழகம் அமைக்கவுள்ளோம். அது பற்றிச் சென்னையில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்வியாளர்களுடன் ஆலோசனை நடத்த இங்கு வந்துள்ளோம்'' - என்று தகவல் தந்தார். இதன்பின், அமைச்சர் ராஜூ அளித்த பேட்டியில் கூறியதாவது:-

கே:- மலேசியாவில் தற்போது நிலைவரம் எப்படி இருக்கிறது?

ப:- எந்தவித பதற்றமும் இல்லை. ஒற்றுமையாக மகிழ்ச்சியுடன் வாழ்கிறோம். இந்துக்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றனர் என்றும், இந்தியர்கள் கஷ்டப்படுகின்றனர் என்றும் தவறான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. உங்கள் முதல்வர் கூட இதுபற்றி ஏதோ கூறியிருக்கின்றார். எல்லா நாடுகளிலும் ஏற்றத்தாழ்வுகள், குறைபாடுகள் இருப்பது சகஜம். இந்தியாவில் குறைகளே இல்லையா? மலேசியாவில் மலேசியன், இந்தியன், ஸ்ரீலங்கன் என்ற எந்த வேறுபாடும் இன்றி ஒற்றுமையாகவே வாழ்கிறோம்.

கே:- பிரிட்டிஷ் தூதரகத்தில் மனு கொடுக்க சென்றவர்களை தடியடி நடத்தி கலைத்தது ஏன்?

ப:- ஐம்பது வருடம் அமைதியாக இருந்துவிட்டு இப்போது மனுக்கொடுப்பது ஏன்? இந்த மனுவை 50 வருடத்துக்கு முன்பே கொடுத்திருக்க வேண்டியதானே - என்று பதிலளித்தார் ராஜூ.


### தவறிவிட்டது

அரியாலையைச் சேர்ந்த நடராசா சண்முகராசா என்பவரது தே.அ.அட்டை (472872702V) கோண்டாவில் சந்தியிலிருந்து பாற்பண்ணை வீதி வழியாகக் கல்வியங்காடு செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுவேந்தா லோன்ரி, கல்வியங்காடு சந்தை, கல்வியங்காடு எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.



### தவறிவிட்டது

12.12.2007 அன்று திருகோணமலையிலிருந்து யாழ்.வந்த கப்பல் பிரயாணத்தின்போது திருமதி பாஸ்கரன் ஸ்ரீரேணுகாதேவி ஆகிய எனது உடுபுடைவைகள், மருந்துகள் ஆகியன அடங்கிய பிரயாணப்பொதி (கறுப்பு நிறம்) தெல்லிப்பழைக்கு அண்மையில் தவறிவிட்டன. தவறுதலாக எடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (சன்மானம் வழங்கப்படும்.)

*418, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.*
T.P.: 021 222 6821 021 222 9141


### சாவகச்சேரியில் டெங்கு விழிப்புணர்வுப் பதாகைகள்

குருநகர்,டிசெ.18

யாழ்.மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள கொடிகாமம் சந்தை, கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வரணி வைத்தியசாலை ஆகிய இடங்களில் விழிப்புணர்வுப் பதாகைகள் வைக்கப்படவுள்ளன.

(51)

### யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி

### பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர்வரும் 23.12.2007 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யா/மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(69064) **அதிபர்.**

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



*அமரர்*

### குமாரசாமி சிவகுமாரன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26.11.1969 | 18.12.2003 |

ஆறாத்துயரில் எங்களை ஆழ்த்திவிட்டு மீளாத்துயிலில் நீங்கள் சென்று நாலாண்டு காலம் கடந்தாலும் உங்கள் நினைவால் வாழும் நாம் ஆத்ம சாந்தி வேண்டி ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*58, மணிக்கூட்டு ஒழுங்கை,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* (69069) **V.T.குமாரசாமி குடும்பம்.**

## மரண அறிவித்தல்கள்

### டல்சி மங்கையர்க்கரசி முத்தையா

**(இளைப்பாறிய ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)**



மீசாலையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மங்கையர்க்கரசி முத்தையா 16.12.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் A.R.S முத்தையாவின் அன்பு மனைவியும் வதனியின் அன்புத் தாயும் ஜெபநாயகத்தின் அன்பு மாமியும் டிலக்ஷி, டெரிக், சுமித்திரா, காலஞ்சென்ற சஞ்ஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஷமிந்தா, சஞ்ஜனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் நடராசா, திருமதி சர்வலக்ஷ்மி, காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், ரட்ணசபாபதி, பராசக்தி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (18.12.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்வம் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*உடுவில்.* (69072) தகவல்: **வதனி ஜெபநாயகம்.**

### திருமதி பார்வதி நடராசா

அராலி வடக்கைச் சேர்ந்த திருமதி பார்வதி நடராசா 16.12.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லத்துரை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் சோமாஸ்கந்தராஜா, நந்தினி (இளைப்பாறிய ஆசிரியை), நித்தியகுமார், நளினி (கனடா), ராஜ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் அம்பிகா (டெல்மன் வைத்தியசாலை - கொழும்பு), ஜெயக்குமார் (அதிபர், யா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்), டாக்டர் நவலட்சுமி (ஆயுள்வேத போதனா வைத்தியசாலை, கைதடி), குலசிங்கம் (கனடா), லதா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் டிலக்சன், சுபன், யகுலன், கஜானன், பிரணவன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ''அற்புத வாசா'', அராலி வடக்கு இல்லத்தில் இன்று (18.12.2007) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அராலி வடக்கு இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. (69073) தகவல்: **நித்தியகுமார் (மகன்).**

## நினைவஞ்சலி

**10ஆம் வருடம்**



பிறப்பு 07 ★ 03 ★ 1938 — மறுவாழ்வு 13 ★ 11 ★ 1997

**அருளப்பன் றீற்றம்மா**

**முதலாம் வருடம்**



பிறப்பு 22 ★ 03 ★ 1922 — மறுவாழ்வு 19 ★ 12 ★ 2006

**பேதுரு அருளப்பன்**

**(வைத்தியகலாநிதி D.A.M and D.I.M.S)**

ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறு பெற்றோர். *தி.பா. 128*

*சுப்பிரமணியம் றோட், சுன்னாகம்.* தகவல்: **அ.அன்ரன்கிறேசியன்** *(மகன்).* (68893)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வம்சாவளியினர் மீதான வழக்குகள் ரத்து

## மலேஷியாவில்

கோலாலம்பூர், டிச. 18

மலேஷியாவில் 31 இந்திய வம்சாவளியினர் மீது போடப்பட்டிருந்த கொலை முயற்சி வழக்கை அந்நாட்டு அரசு ரத்துச் செய்துள்ளது.

மலேஷியாவில் இந்தியர்கள் பாரபட்சத்துடன் நடத்தப்படுகின்றனர் என்றும், அங்குள்ள கோயில்கள் இடிக்கப்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டி இந்து உரிமைகள் கட்சியான ஹிண்ட்ராப் அமைப்பின் சார்பில் கடந்த மாதம் 25ஆம் திகதி கோலாலம்பூரில் பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணியில் பங்கேற்றவர்கள் மீது மலேஷியப் பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியும் பீரங்கிகளைக் கொண்டு தண்ணீர் பீய்ச்சியும் தாக்குதல் நடத்தினார்கள்.


மேலும், இந்தப் பேரணியில் பங்கேற்ற 31 பேர் பத்துமலை முருகன் கோயில் அருகே காவலர் ஒருவரைத் தாக்கி கொலை செய்ய முயற்சித்தார்கள் எனக் குற்றஞ்சாட்டி அவர்கள் மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதில் ஹிண்ட்ராப் அமைப்பின் சட்ட ஆலோசகர்களான பி. உதயகுமார், கணபதி ராவ் உள்ளிட்ட 5 பேர் மீது உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மலேஷிய அரசின் இந்தச் செயலுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் 31 இந்தியர்கள் மீதான கொலை முயற்சி வழக்குகள் கைவிடப்படுவதாக மலேஷிய நீதிமன்றம் நேற்று அறிவித்தது. கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது 5 பேர் மீதான அனைத்து வழக்குகளும் கைவிடப்படுகின்றன என்றும் எஞ்சிய 26 பேரின் மீதான கொலை முயற்சி வழக்கும் ரத்துச் செய்யப்படுவதாகவும் அரச வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 31 இந்தியர்களும் தங்கள் மீது அமைதிக்கு ஊறு விளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர் எனக் கூறப்பட்ட புகார்களையும் மறுத்தனர். சர்வதேச அளவில் ஏற்பட்ட நிர்ப்பந்தம் காரணமாகவே மலேஷிய அரசு இந்தியர்கள் மீதான வழக்கை கைவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மலேஷிய அரசின் இந்த நடவடிக்கை காரணமாக இந்தியர்கள் பிரச்சினையில் அரசு மென்மையான போக்கைக் கடைப்பிடிப்பதற்கான அறிகுறி ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.



கைதுசெய்யப்பட்ட இந்திய வம்சாவளியினரை விடுதலை செய்யக்கோரி நேற்றுமுன் தினம் மலேஷியாவில் உள்ள இந்துக்கோயில் ஒன்றுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழர்கள்.

# ஹிலாரி கிளின்ரனை முந்துகிறார் ஒபாமா

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் தேர்வில் முன்னாள் ஜனாதிபதி கிளின்ரன் மனைவி ஹிலாரியை பராக் ஒபாமா முந்திச் செல்கிறார் எனக் கருத்துக்கணிப்புக்களிலிருந்து அறிய முடிகிறது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டில் நடைபெறவுள்ளது. அதையொட்டி அந்நாட்டின் பிரதான கட்சிகளான ஜனநாயகக் கட்சியும், குடியரசுக் கட்சியும் தங்கள் வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளின்ரன், பராக் ஒபாமா, ஜோன் எட்வேர்ட்ஸ், ஜோ பிடன், டெனிஸ் குசினிச் உள்ளிட்ட பலர் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளனர். இதில் ஒபாமா மற்றைய அனைவரையும் விட ஆதரவில் முந்தி நிற்கின்றாரெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை இல்லினாய்ஸ் மாகாணத்தில் ஜனநாயகக் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் 500 பேரிடம் அந்நாட்டுத் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று கருத்துக் கணிப்பு நடத்தியது. அதில் ஒபாமா 50 சதவீத ஆதரவைப் பெற்றுள்ளார். ஹிலாரி 25 சதவீத ஆதரவும், ஜோன் எட்வேர்ட்ஸ் 7 சதவீத ஆதரவும் மற்றவர்கள் 2 சதவீதத்துக்கும் குறைவான ஆதரவுமே பெற்றனர் என அந்தக் கருத்துக்கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன. இதனால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஒபாமாவுக்கு பிரகாசமான வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

## பாகிஸ்தானில்

# தற்கொலைத் தாக்குதல் 9 இராணுவத்தினர் பலி

வசிரிஸ்தான், டிச18

பாகிஸ்தானில் வடமேற்கு பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இராணுவ உதைப்பந்தாட்ட அணியொன்றே தாக்குதலுக்கு இலக்காகியது.

கொஹட் நகரின் உயர் பாதுகாப்பு பகுதியிலேயே இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. உதைப்பந்தாட்டப் போட்டியொன்றின் பின்னர் திரும்பிக்கொண்டிருந்த இராணுவத்தினரே தாக்குதலிற்கு உள்ளானார்கள் என இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரல் வாஹீட் அர்சாத் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ள மூன்றாவது தற்கொலைக்குண்டுத் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் அமெரிக்கா தோல்வி!

## அல் - குவைதா பெருமிதம்

ரியாட், டிச.18

ஈராக்கில் நடைபெற்றுவரும் போரில் அமெரிக்கா தோல்வி கண்டுவிட்டதெனக் கூறியுள்ள அல் - குவைதாவின் துணைத் தலைவர் அய்மன் அல் - ஜவாஹிரி, ஈராக்கிலிருந்து வெகுவிரைவில் வெளியேற அமெரிக்கா திட்டமிட்டிருக்கின்றது எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், ஈராக்கின் கிளர்ச்சிக்காரர்கள் மத்தியில் உள்ள துரோகிகளுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ள ஜவாஹிரி, அமெரிக்கர்களுக்கு உதவுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் தனது சக போராளிகளிடம் அவர் கோரியுள்ளார்.




அமெரிக்க ஆதரவுடன் அல் - குவைதா மற்றும் அதன் ஆதரவுக் குழுக்களிற்கு எதிராகச் செயற்படும் சுனிப் பழங்குடி இனக்குழுக்கள் சில உருவாக்கியிருக்கும் விழிப்புணர்ச்சிச்சபைகள் குறித்தே ஜவாஹிரி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். இந்தக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டதனால் வன்முறைகள் குறைவடைந்துள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவிக்கின்றது.

போராளிகள் மத்தியில் ஏமாற்றுப் பேர்வழிகளும் துரோகிகளும் காணப்படுவகின்றனர் என்றும் அவர்கள் அமெரிக்காவிற்காகப் பணியாற்றுகின்றனர் - போராடுகின்றனர் எனவும் 90 நிமிட ஒளிநாடா உரையில் அல் - ஜவாஹிரி குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்கில் போராடுபவர்கள் இலஞ்சம் வாங்கும் துரோகிகளை தம் மத்தியிலிருந்து அகற்றவேண்டும், மத நம்பிக்கையை விற்றுவிட்டு சிலுவையின் கீழ் போராடுபவர்களை முஸ்லிம் உலகத்திற்கு அம்பலப்படுத்த வேண்டும் எனவும் ஜவாஹிரி தெரிவித்துள்ளார். அமெரிக்காவை ஆதரிப்பவர்கள் வெறுக்கத்தக்கவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

துரோகிகளையும் மத நிந்தனை செய்பவர்களையும் தன்னிடமிருந்து அகற்றாத பழங்குடியினரோ இனமோ வரலாற்றில் துரோகிகளாகக் கருதப்படுவார்கள் என அவர் எச்சரித்துள்ளார். அதேவேளை, இஸ்லாமிய மதத்தைக் காப்பாற்றுபவர்கள், துரோகிகளை அழிப்பவர்கள், அரேபிய வரலாற்றில் பெருமையுடன் நினைவு கூரப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்கில் அமெரிக்கா தோற்றுவிட்டது. அங்கிருந்து அது வெகு விரைவில் வெளியேறும் என்றும் ஜவாஹிரி குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கப் படையினர் தோற்கடிக்கப்பட்டுவிட்டனர். தப்புவதற்கான வழியைத் தேடுகின்றனர். ஈராக்கிலிருந்து படைகளை விலக்கவேண்டும் என அமெரிக்க மக்கள் பெருமளவில் [illegible] என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இராட்சத பிரசார இயந்திரங்கள் மக்களை எவ்வளவு தூரம் ஏமாற்ற முயன்றாலும் யதார்த்தம் என்பது வலுவானது என்றும் ஜவாஹிரி குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தானிலேயே பின்லேடன் பதுங்கல்

## முஷாரப் ஒப்புதல்

இஸ்லாமாபாத், டிச.18

''அல் - குவைதா தலைவர் ஒஸாமா பின்லேடன், பாகிஸ்தானில் உள்ள பஜாவூர் பகுதியில்தான் பதுங்கி இருக்கிறார்'' என்று அந்நாட்டு ஜனாதிபதி முஷாரப் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

சர்வதேச பயங்கரவாதி பின்லேடன் ஆப்கானிஸ்தானில்தான் தஞ்சம் புகுந்திருந்தார். அவரை ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்த தலிபான் ஒப்படைக்க மறுத்ததால் அமெரிக்கா அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்தி தலிபான் ஆட்சியை கவிழ்த்தது.

இதைத் தொடர்ந்து, தலிபான்களும்

உலக அரங்கில்

அல் - குவைதாத் தீவிரவாதிகளும் அண்டை நாடான பாகிஸ்தானில் புகுந்தனர். அவர்களுடன் சேர்ந்து பின்லேடனும் பாகிஸ்தானில் புகுந்தார். அந்த நாட்டில் ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் உள்ள பழங்குடி இனமக்கள் வசிக்கும் பகுதியில் அவர்கள தஞ்சம் புகுந்தனர். பழங்குடி இன மக்கள் அவர்களுக்கு ஆதரவு அளித்தனர்.

அமெரிக்க உளவு நிறுவனங்கள் இதைக் கண்டறிந்து பின்லேடன் பாகிஸ்தானில்தான் பதுங்கியிருக்கிறார் என்று கூறின. ஆனால், இதைப் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் ஏற்க மறுத்துவிட்டார். 'பாகிஸ்தானில் பின்லேடன் இல்லவே இல்லை' என்று சத்தியம் செய்யாத குறையாக முஷாரப் கூறினார். ஆனால், அமெரிக்கா அவர் கூறியதை நம்பவில்லை.

அல் - குவைதாத் தீவிரவாதிகளை ஒடுக்கவும், பின்லேடனை பிடிக்கவும் பாகிஸ்தான் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றே அமெரிக்கா கூறிவந்தது.

இந்த நிலையில், பின்லேடன் பாகிஸ்தானில்தான் பதுங்கியிருக்கிறார் என்பதை முஷாரப் இப்போது ஒப்புக்கொண்டு இருக்கிறார். இதை அவர் ஒரு பேட்டியில் நேற்று முன்தினம் தெரிவித்தார். அவர் இதுபற்றி கூறுகையில், 'பாகிஸ்தானில் பழங்குடி இன மக்களில் ஒரு பிரிவினரான புஷ்டுன் மக்கள் அதிகம் வசிக்கும் குனார் மாநிலத்தில் உள்ள பஜாவூர் மாவட்டத்தில்தான் பின்லேடன் பதுங்கியிருக்கிறார்' என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''பின்லேடனை வேட்டையாடுவதற்காக அமெரிக்கா தன்னிச்சையாக பாகிஸ்தானில் தாக்குதல் நடத்துவதை ஏற்க முடியாது. அதேபோல், அணுஆயுத இரகசியங்களை வெளிநாடுகளுக்கு விற்றது தொடர்பாக பாகிஸ்தானின் அணு விஞ்ஞானி டாக்டர்-ஏ.கியூ.கானை அமெரிக்காவிடம் ஒப்படைக்க முடியாது. இந்த இரண்டும் பாகிஸ்தானால் ஏற்றுக்கொள்ள முடியாதவை ஆகும்.

மேற்கத்தைய நாடுகளுடன் உள்ள பிரச்சினை என்ன என்றால் அவர்கள் விரும்புவதை எல்லாம் வளரும் நாடுகளும் செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பதுதான். நாங்கள் அந்த அளவுக்குச் சிறுவர்களா?.'' - இவ்வாறு முஷாரப் கூறினார்.

# குர்திஷ் நிலைகள் மீது விமானங்கள் தாக்குதல்

கிர்குக், டிச.18

துருக்கியின் விமானங்கள் ஈராக்கிலுள்ள குர்திஷ் போராளிகளின் நிலைகள் மீது நேற்றுமுன்தினம் தாக்குதலை மேற்கொண்டுள்ள அதேவேளை அமெரிக்காவே இதற்கான புலனாய்வுத் தகவல் மற்றும் தந்திரோபாய உதவிகளை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட ஈராக்கிலுள்ள குர்திஷ் போராளிகளின் நிலைகள் மீது 50 இற்கும் மேற்பட்ட விமானங்கள் மூன்று மணித்தியாலங்களாக் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. குர்திஷ் தொழிலாளர் கட்சிக்கு (பி.கே.கே) எதிராக நடத்தப்பட்ட மிகப்பெரிய விமானத் தாக்குதல் இதுவென தெரிவிக்கப்படுகின்றது.

ஈரான், ஈராக், துருக்கி ஆகிய மூன்று நாடுகளுடனான எல்லைப் பகுதியில் உள்ள குவான்பில் மலைப் பகுதியில் காணப்படும் போராளிகளின் நிலைகள் மீது நள்ளிரவில் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. பல கிராமங்கள் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக குற்றஞ்சாட்டியிருக்கும் ஈராக்கிய அதிகாரிகள், தாக்குதலில் பெண்மணியொருவர் கொல்லப்பட்டார் எனத் தெரிவித்துள்ளனர்.

குர்திஷ் போராளிகள் இரு பொதுமக்களும் ஐந்து உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கலக்கப் போகும் காலி மைதானம்

## இன்று இலங்கை - இங்கிலாந்து மூன்றாவது டெஸ்ட்

காலி, டிச.18

எதையும் அழிப்பது எளிது. உருவாக்குவது கடினம். ஆனால், இயற்கையின் சீற்றத்துக்கு அணைபோட முடியுமா?. அதன் கோரத்தாண்டவத்தால் 2004இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையில் சிக்கி சின்னாபின்னமாகிப் போன முக்கிய இடங்களில் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானமும் ஒன்று.

கிட்டத்தட்ட 3 வருடங்களின் பின்னர் பலரதும் அயராத உழைப்பின் காரணமாக தற்போது காலி கிரிக்கெட் மைதானம் மீண்டும் பிறப்பெடுத்துள்ளது. இன்று ஆரம்பமாகும் இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி, மீண்டும் பிறப்பெடுத்துள்ள காலி மைதானத்திலேயே நடைபெறவுள்ளது.


இந்தப் புகழ்பெற்ற மைதானம், 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி இந்தியப் பெருங்கடல் கொதித்துபோது எழுந்த பேரலைகளால் சின்னாபின்னமானது. ஆழிப்பேரலைகள் காலி மைதானத்தை இருந்த இடம் தெரியாமல் அழித்துவிட்டு அடங்கிவிட்டன. ஆனால், அந்த மைதானம் சின்னாபின்னமாகிப் போன துயரத்தை ரசிகர்களிடமிருந்து அழிக்க ஸ்ரீலங்கா கிரிக்கெட் கடுமையாக முயற்சித்தது. அதே இடத்தில் ஸ்ரேடியத்தை கொண்டுவர அவர்கள் தீர்மானித்தனர். போதிய நிதியுதவி இல்லாமல் தவித்த ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுக்கு நிதியுதவி அளித்தோர் பலர். 5 கோடி ரூபா திரட்டி அந்த மைதானத்தை புத்தாக்கம் செய்ய ஸ்ரீலங்கா கிரிக்கெட் முடிவுசெய்தது.

கடற்கரையை ஒட்டி மைதானம் உள்ளதால் பணிகள் திட்டமிட்டபடி விரைவாக முடியவில்லை. தற்போது பணிகள் அனைத்தும் முடிவுற்று டெஸ்ட்டுக்குத் தயாராகியுள்ளது காலி சர்வதேச கிரிக்கெட் மைதானம். இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இந்த காலி மைதானத்தில் ஆரம்பிக்கின்றது.

சுழற்பந்துவீச்சில் போட்டி போட்டு சாதனை படைத்த முரளிதரனுக்கும் ஷேன் வோர்னுக்கும் இந்த மைதானம் ஒரு வகையில் சிறப்பு வாய்ந்தது. தனது 400ஆவது விக்கெட்டை முரளிதரனும், தனது 500ஆவது விக்கெட்டை வோர்னும் இங்குதான் கைப்




பற்றியிருந்தார்கள். இவையெல்லாம் கிரிக்கெட் அல்லாத ரசிகர்கள் நினைவில் வைத்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், சுனாமி தாக்குண்ட மைதானம் என்பது மட்டும்



எல்லோரது மனதிலும் எப்போதும் நினைவிருக்கும்.

காலி மைதானத்தை நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார். இன்றைய போட்டியில் வெற்றி பெறுவது இலங்கையா?, இங்கிலாந்தா? என்பதற்கும் மேலாக புனரமைப்பு பெற்றுள்ள ஸ்ரேடியத்தில் விளையாடுபவர்களும், ஆட்டத்தை காண்பவர்களும் உணர்ச்சிப் பெருக்கில் மூழ்கிப் போவது நிச்சயம்.

# ஆஸி. புறப்பட்டது இந்திய அணி



மும்பை, டிச.18

பாகிஸ்தானை வீழ்த்திய மகிழ்ச்சியில் இருக்கும் இந்திய அணி, அடுத்து ஆஸ்திரேலியாவை சந்திக்கத் தயாராகியுள்ளது. இதற்காக கும்ளே தலைமையிலான இந்திய அணி நேற்று ஆஸ்திரேலியா புறப்பட்டுச்சென்றது.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட், முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்க உள்ளது. முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26ம் திகதி தொடங்குகிறது. இதற்கு முன்னதாக எதிர்வரும் 20ஆம் திகதி மெல்போணில் நடக்கும் பயிற்சிப் போட்டியில் விக்டோரியா அணியை சந்திக்கிறது. நேற்று மும்பையிலிருந்து ஆஸ்திரேலியா புறப்படுவதற்கு முன்பாக இந்திய அணித்தலைவர் கும்ளே அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

''சர்வதேச அளவில் 30 ஆயிரம் ஓட்டங்களுக்கும் அதிகமாக குவித்துள்ள மத்திய வரிசை வீரர்கள் அணியில் உள்ளனர். முதல் இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் எடுத்தால், பந்துவீச்சாளர்கள் எளிதில் விக்கெட் வீழ்த்தலாம். சில மூத்த வீரர்களுக்கு இதுவே கடைசி ஆஸ்திரேலியச் சுற்றுப் பயணமாக இருக்கும். இதனால் இம்முறை சிறப்பாகச் செயற்படுவோம். ஆஸ்திரேலியாவைச் சந்திக்கத் தயார். ஆஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தும் திறமை இந்திய அணியிடம் உள்ளது. திறமையும், அனுபவமும் வாய்ந்த வீரர்கள் அணியில் உள்ளனர். அங்கு நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப எங்களைத் தயார் செய்து கொள்ள போதிய அவகாசம் உள்ளது.'' - இவ்வாறு கும்ளே தெரிவித்தார்.

இத்தொடர் குறித்து அனுபவ வீரர் லக்ஸ்மன் அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:- கடந்த முறை ஆஸ்திரேலிய அணியை வீழ்த்த முடியவில்லை. இருப்பினும் தொடரைச் சமப்படுத்தினோம். இம்முறை நிச்சயம் வெல்ல வேண்டும் என்ற இலட்சியத்துடன் செல்கிறோம். ஆஸ்திரேலிய மண்ணில் சிறப்பாக செயற்படுவதுதான் ஒவ்வொரு கிரிக்கெட் வீரரின் கனவாக இருக்கும். அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பதே ஒவ்வொருவரின் எண்ணம். ஆஸ்திரேலியத் தொடரை ஒவ்வொரு வீரரும் தன்னம்பிக்கையுடன் ஆரம்பிப்பது அவசியம். பாகிஸ்தான் தொடரில் ஓட்டங்கள் குவித்து சிறப்பான நிலையில் உள்ளது மகிழ்ச்சி. பல ஆண்டுகள் கழித்து பாகிஸ்தானை இந்திய மண்ணில் வீழ்த்தியுள்ளோம். இது வீரர்களுக்கு நம்பிக்கை அளித்துள்ளது. மெக்ராத், வோர்ன் ஆகியோர் ஓய்வுபெற்றுள்ளபோதும் ஆஸ்திரேலிய அணியில் 'மட்ச்-வின்னிங்' பந்துவீச்சாளர்கள் உள்ளனர். ரெய்ற், பிரட் லீ மற்றும் ஸ்ருவேட் கிளார்க் கூட்டணியை சந்திப்பது எளிதான விடயமல்ல. இத்தொடர் விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.'' - இவ்வாறு லக்ஸ்மன் தெரிவித்தார்.

## ருவென்ரி/20 போட்டி

# ரெய்லரின் வேகத்தில் திணறியது தென்னாபிரிக்கா

## 5 விக்கெட்டுகளால் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி

போர்ட் எலிசபெத், டிச.18

ஜெரோமி ரெய்லர் வேகப் பந்துவீச்சில் அசத்த, தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ருவென்ரி/20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றியைப் பதிவுசெய்தது.




தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்து மேற்கிந்தியத் தீவுகள் அணி விளையாடி வருகின்றது. அங்கு ஒருநாள், டெஸ்ட் தொடர்களில் மேற்கிந்தியத் தீவுகள் விளையாடுகின்றது. முன்னதாக நேற்றுமுன்தினம் இரு அணிகளுக்குமிடையிலான ருவென்ரி/20 போட்டியொன்று நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் ஜெயித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணியை ரெய்லரின் வேகம் புரட்டியெடுத்தது. ஆட்டத்தின் இரண்டாவது ஓவரை வீசிய அவர் முதலாவது, இரண்டாவது, ஐந்தாவது பந்துகளில் வான் வைக் (1), போல் டுமினி (0), டீ வில்லியர்ஸ் (0) ஆகியோரின் விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார். மறுமுனையில் மற்றைய வேகங்களும் மிரட்ட தென்னாபிரிக்க செய்வதறியாது தவித்தது. 37 ஓட்டங்களுக்குள் 8 விக்கெட்டுகளை அந்த அணி இழந்துவிட்டது.

இந்நிலையில் - 13ஆவது ஓவர் வீசி முடிக்கப்பட்டிருந்த நிலையில் மழை ஆட்டத்தைக் குழப்பியது. அப்போது தென்னாபிரிக்கா அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 37 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றியிலக்காக 13 ஓவர்களில் 59 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை 9.5ஆவது ஓவரில் 5 விக்கெட்டுகளை இழந்து அடைந்து வெற்றியைப் பதிவுசெய்தது மேற்கிந்தியத் தீவுகள். மோர்ரன் 20 ஓட்டங்களையும், ராம்டீன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் டேல் ஸ்ரைன் 3 ஓவர்கள் வீசி 9 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

# வேகம்தான் இந்தியாவின் பலவீனம் - அக்தர்

மெல்போண், டிச.18

''இந்திய வீரர்கள் வேகப்பந்துவீச்சில் திணறுவது வழக்கம். இதனை உணர்ந்து ஆஸ்திரேலிய அணியில் ஷோன் ரெய்ற் தேர்வு செய்யப்பட வேண்டும்.''

- இவ்வாறு கூறியிருக்கின்றார் பாகிஸ்தான் அணியின் சுழற்பந்துவீச்சாளர் சொய்ப் அக்தர்.

'சண்டே ரெலிகிராப்' பத்திரிகைக்கு அக்தர் அளித்துள்ள பேட்டியொன்றில் கூறியிருப்பவை வருமாறு:-

''இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை வலுவாகவுள்ளது. வழக்கமான ஆடுகளங்களை அமைத்தால் மிகச் சுலபமாக ஓட்டங்களைச் சேர்த்து விடுவார்கள். இதனைத் தடுக்க ஆஸ்திரேலியத் தொடரின் போது பந்துகள் எகிறும் வகையில் ஆடுகளங்கள் அமைக்கப்பட வேண்டும்.

''அதுதவிர வேகப்பந்வீச்சாளர்களைக் கண்டால் இந்திய வீரர்களுக்கு பயம் அதிகம். இதனை உணர்ந்து அசுர வேகத்தில் பந்துவீசும் ஷேன் ரெய்ற் கட்டாயம் தேர்வு செய்யப்பட வேண்டும். இவர் பந்தை எறிகின்றார் என நியூஸிலாந்து அணி புகார் கூறியிருப்பதில் அர்த்தமில்லை. இவர் புயல் வேகத்தில் பந்து வீசுவதை அவர்களால் சமாளிக்க முடியவில்லை. இதனை மறைக்கவே பந்துவீச்சு குறித்து புகார் சொல்கிறார்கள். என் மீதும் 2001இல் இதே போன்ற புகாரை நியூஸிலாந்து வீரர்கள் சுமத்தினார்கள்.

''தற்போது துடுப்பாட்ட வீரர்களின் விளையாட்டாக கிரிக்கெட் மாறி வருகிறது. பந்துவீச்சாளர்களுக்கு போதிய அதிகாரம் இல்லை. புதிய விதிமுறைகள் காரணமாக அதிகளவில் 'பவுன்ஸர்கள்' வீச முடிவதில்லை. பந்துவீச்சாளர்கள் மற்றும் துடுப்பாட்ட வீரர்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டியைக் காணவே ரசிகர்கள் விரும்புகிறார்கள். துடுப்பாட்டத்திற்கு சாதகமாக ஆடுகளங்கள் அமைக்கப்படுவதால், வீரர்கள் ஓட்ட மழை பொழிகிறார்கள். சமீபத்திய டெஸ்ட் தொடரின் போது கூட இந்திய அணி 600 ஓட்டங்களை எளிதாக எடுத்தது. சாதாரண வீரர்கள் கூட ஓட்டங்களை குவிக்கிறார்கள். டெஸ்ட் போட்டிகளில் 6 ஆயிரம் முதல் 7ஆயிரம் ரன்கள் வரை மிக எளிதாக கடந்து விடுகின்றனர்.

''ஆஸ்திரேலியக் கிரிக்கெட் நிர்வாகம் ருவென்ரி/20 போட்டிக்கு மைக்கல் கிளார்க்கை அணித்தலைவராக நியமித்தது சரியல்ல. மூத்த வீரரான கில்கிறிஸ்ட்டுக்குத்தான் இந்த வாய்ப்பை வழங்கியிருக்க வேண்டும். எதிர்கால அணித்தலைவர் என்று குறிப்பிடப்படுவதால் மைக்கல் கிளார்க்கிற்கு நெருக்கடி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அடுத்த 10 டெஸ்ட் போட்டிகளில் இவர் சோபிக்கத் தவறினால், அணியில் இருந்தே நீக்கப்படும் அபாயம் ஏற்படலாம்.



''எதிர்வரும் மார்ச் மாதம் ஆஸ்திரேலிய அணி, பாகிஸ்தான் வர உள்ளது. இத்தொடரின் போது பாதுகாப்புக் குறித்து சைமண்ஸ் அச்சம் தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலிய வீரர்கள் பயப்படத் தேவையில்லை. அனைவருக்கும் உரிய பாதுகாப்பு அளிக்கப்படும்.'' - இவ்வாறு அக்தர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஐ.நா. மீதான சேறு பூசல்கள் வேண்டாத விளைவுகளைத் தரும்

இலங்கையின் தற்போதைய அரச நிர்வாகம் பல்வேறு சாதனைகளை வரிசையாகப் படைத்து வருகின்றது.

ஊடகவியலாளர்கள் பணியாற்றுவதற்கான மிக மோசமான - ஆபத்தான - இடம் இலங்கை என்ற பெயரை இங்கு விஜயம் செய்து, விடயங்களை நேரில் கண்டறிந்த சர்வதேச ஊடக அமைப்புகளின் குழு இலங்கைக்குச் சூட்டியது.

அதேபோன்று, தொண்டு நிறுவனப் பணியாளர்கள் பணியாற்றுவதற்கு உலகிலேயே ஆபத்தான இடம் இலங்கை என்ற உண்மையை கடந்த ஓகஸ்ட்டில் இலங்கைக்கு விஜயம் செய்து இங்குள்ள அவல நிலையைப் பார்த்தறிந்த மூத்த ஐ.நா. அதிகாரி ஒருவர் பகிரங்கமாக வெளியிட்டார்.

அப்படிக் கருத்து வெளியிட்டமைக்காக, மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியான ஜோன் ஹோம்ஸ், இலங்கை அரசின் மூத்த அமைச்சர் ஒருவரால் 'பயங்கரவாதி' என்றும் 'புலிகளிடம் பணம் வாங்கியுள்ளார்' என்றும் பட்டம் சூட்டப்பட்டார்.

இப்போது, அந்த ஐ.நா. உயரதிகாரி வெளியிட்ட அதே கருத்தை உலகெங்கும் பணியாற்றும் தமது 13 ஆயிரம் ஐ.நா. பணியாளர்களிடமும் ஐ.நாவின் சர்வதேச பொதுச் சேவைகள், பாதுகாப்பு மற்றும் சுயாதீன பணியாளர் அமைப்பு முன்னெச்சரிக்கைத் தகவலாகத் தெரிவிக்கவுள்ளது எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

உலகிலேயே தொண்டுப் பணியாளர்களுக்கு மிக ஆபத்தான பிரதேசமாக இலங்கை மாறியிருப்பதால், அங்கு பணியாற்றச் செல்வதைத் தவிர்க்குமாறு தனது 13 ஆயிரம் பணியாளர்களுக்கும் எச்சரிக்கை ஆலோசனையாக அந்த அமைப்பு தெரிவிக்க இருக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

சர்வதேசத்தை - குறிப்பாக சர்வதேச தொண்டு அமைப்புகளை - கையாளத் தெரியாத அரசின் பொறுப்பற்ற போக்கால் வந்த வினையன்றி இது வேறில்லை.

நாடாளுமன்றப் பெரும்பான்மைக்கும், நாட்டின் மக்கள் ஆதரவுக்கும் அல்லாடும் அரசுத் தலைமை, அதனால் தென்னிலங்கையில் பௌத்த - சிங்கள மேலாதிக்கப் போக்குடைய பேரினவாதிகளின் காலில் வீழ்ந்து கிடக்கிறது. அவர்களின் இசைக்கு ஏற்ப தனது ஆட்சி நடனத்தை ஆடுகிறது.

சர்வதேசம் என்றாலே அந்தப் பேரினவாத சக்திகளுக்குப் பாகற்காய். அதனால் சர்வதேசத்தை அந்தச் சக்திகள் தூஷிக்க - கேவலப்படுத்த - அந்தப் பாதையில் அரசும் பயணித்துத் தனக்கும், இலங்கைத் தீவுக்கும் தலையில் மண் அள்ளிக் கொட்டிக் கொள்கிறது.

இப்போது உலகெங்கும் பணியாற்றும் ஐ.நா. பணியாளர்களை இலங்கைக்கு எதிராக உசுப்பேற்றிவிடும் அளவுக்கு இந்தச் சக்திகளின் வழிகாட்டல்கள் இந்த அரசை வழிப்படுத்தியிருக்கின்றன.

ஐ.நா. அமைப்புகள் மீதும், அவற்றின் பிரதிநிதிகள் மீதும், பணியாளர்கள் மீதும் பொறுப்பின்றி, கேவலமாக, எள்ளி நகையாடும் விதத்தில், அரசுத் தரப்பிலிருந்தும் தென்னிலங்கையிலிருந்தும் சேறாக அள்ளி வீசப்படும் குற்றச்சாட்டுகளும், அதற்கு வாய்ப்பளித்துப் பார்த்திருக்கும் அரசுத் தலைமையின் விட்டேத்தியான போக்கும் ஐ.நா. பணியாளர்களை சீற்றமுற்றுக் கிளர்ந்தெழ வைத்திருக்கின்றன என்பதே உண்மை.

இலங்கையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் இரு தொண்டுப் பணியாளர்கள் கொல்லப்பட்டமையை அனைத்துலக சமூகமும், அனைத்து ஐ.நா. அமைப்புகளும் கண்டித்திருந்தன. ஐ.நா. செயலாளர் நாயகம் பான் - கீ - மூன் கூட இந்தப் படுகொலைகளைக் கண்டித்தமையுடன் இவை மோசமான படுகொலைகள் எனவும், இலங்கையில் வாழும் மக்கள் மற்றும் அங்கு பணியாற்றும் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் தொடர்பாகத் தாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளார் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அந்தக் கொலைகளைக் கண்டித்து அமைதியாக நடந்த பேரணியில் ஐ.நாவின் 'யுனிசெவ்' பணியாளர்கள் பங்குபற்றியமைக்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை அரசு வற்புறுத்தியிருப்பது என்ன நியாயம் என ஐ.நா. பணியாளர்கள் சீற்றத்துடன் கேள்வி எழுப்பியிருக்கின்றனர்.

ஐ.நாவையும் அதன் பணியாளர்களையும் குறிவைத்துத் தாக்குவதிலேயே தென்னிலங்கை மும்முரமாக இருக்கிறது.

இதை விடுத்து செஞ்சிலுவைப் பணியாளர்கள் இருவர் மற்றும் 2006 இல் மூதூரில் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் குரூரமாகப் படுகொலை செய்யப்பட்டமை குறித்து புலன் விசாரணை செய்து, அக்குற்றங்களைப் புரிந்தவர்களை சட்டத்தின் - நீதியின் - முன் நிறுத்துவதில் தென்னிலங்கை தனது கவனத்தைத் திருப்பவேண்டும் என ஐ.நா. பணியாளர் அமைப்பு சுட்டிக்காட்டியிருப்பதும் நியாயமானதே.

இப்படி சர்வதேசப் பணியாளர்கள், இலங்கையின் பொறுப்பற்ற - விட்டேத்தியான - போக்குக் குறித்துச் சீறத் தொடங்கியுள்ள பின்னணியில் அதை சமாளிப்பதற்கும் தென்னிலங்கையில் சில எத்தனங்கள் காட்டப்படுகின்றன.

இலங்கைக்கான மனிதாபிமான உதவிகள் தொடர்பான ஆலோசனைக்குழு கடந்த வாரம் கொழும்பில் இடர் முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் நடத்திய தனது மாதாந்தக் கூட்டத்தில் இலங்கையில் ஐ.நா. செயற்பாட்டின் மீது முழு நம்பிக்கையும், ஆதரவும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

சர்வதேச அமைப்புகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகள் முடிவுறும் வரை சம்பந்தப்பட்ட தரப்புகள் பகிரங்க அறிக்கை எதையும் விடுக்கக் கூடாது எனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

ஐ.நாவின் பல்முக நடவடிக்கை அமைப்புகளின் தலைவர்கள், அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் உட்பட்ட வெளிநாட்டுத் தூதுவர்கள், ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் ஜூலியன் வில்ஸன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ உட்பட்ட உயர் மட்டத்தினர் கலந்துகொண்ட இக்கூட்டத்திலேயே ஐ.நா. பணிகள் மீதும், பணியாளர்கள் மீதும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. இலங்கை மக்களின் நல்வாழ்வுக்காக ஐ.நாவும் சர்வதேச அமைப்புகளும் மனிதாபிமான மற்றும் அபிவிருத்திப் பணிகளை அளப்பரிய அளவில் ஆற்றிவருகின்றன என்றும் இக்கூட்டத்தில் விதந்துரைக்கப்பட்டிருக்கிறது.

அதுதான் உண்மை. ஆனால், தனது கேடுகெட்ட அரசியல் லாபத்துக்காகத் தென்னிலங்கை அரசியல் தலைமைகள், இந்தத் தொண்டு உதவிகளை பகடைக்காய்களாக்கி, 'மூன்றாந்தர அரசியலை' நடத்துவதைக் கைவிடப் போவதில்லை; சர்வதேச அமைப்புகளைக் காரணமின்றிச் சாடும் தமது 'பரவணிப் பழக்கத்தை' அவை மாற்றிக் கொள்ளப்போவதில்லை. இப்போக்கால் கொழும்பு எதிர்கொள்ளப்போகும் விபரீதம் இனித்தான் சரியாகத் தெற்குக்குப் புரியவரும்.

# மன்னார் - வவுனியா - மணலாறில் பரவலாக படைகள் - புலிகள் மோதல்

கொழும்பு,டிசெ.18

வடக்கின் முன்னரங்க நிலைகளில் புலிகள் - படைத்தரப்புக்கு இடையே ஆங்காங்கே மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன எனக் கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

மன்னார், மணலாறு, வவுனியாப் பகுதிகளில் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு சம்பவங்களில் 19 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருக்கின் றனர் என்றும், அவர்களிடமிருந்து பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் அறிவித்திருக்கும் படைத்தரப்பு, தமது தரப்பில் இரு படையினர் மட்டும் காயமடைந்துள்ளனர் எனத் தகவல் வெளியிட்டுள்ளது.

மணலாறுப் பகுதியில் நேற்று முன்தினம் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சுத் தாக்குதலில் இரு படைச்சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் -

மணலாற்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஸ்ரீலங்காப் படையினர் இருவர் காயமடைந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா - விளாத்திக்குளம், மன்னார் - நரிக்குளம் மற்றும் அடம் பன் முன்னரங்க நிலைகளில் நடந்த மோதல்களில் 19 புலிகள் கொல்லப்பட்டனர் என்றும், புலிகளின் பதுங்குகுழிகள் பலவும் தாக்கியழிக்கப்பட்டன என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

மன்னார் - மாந்தை முன்னரங்க நிலைகள் மீது புலிகள் தொடுத்த ஷெல் தாக்குதலில் இரு படையினர் காயமடைந்தனர். சிகிச்சைக்காக இருவரும் மன்னார் பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார், தள்ளாடி ஸ்ரீலங்கா படைத் தளத்தினுள் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் படையினர் இருவர் படுகாயமடைந்தனர் என்றும் -

இதற்கிடையே இந்தச் சம்பவம் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் நால்வரை வைத்தியசாலைக்குள் அனுமதிக்க மறுத்த டாக்டர்கள், அவர்களை உரத்த குரலில் பேசிக் கலைத்தனர் என்று ஊடகவியலாளர்கள் சார்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மன்னார் - மடுக் கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின்போது, புலிகளால் விட்டுச் செல்லப்பட்டவை எனக் கூறப்படும் பெருந்தொகை ஆயுதங்களைப் படையினர் கைப்பற்றினர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## பருத்தித்துறையில் நேற்றுத் தேடுதல்

பருத்தித்துறை,டிசெ.18

பருத்தித்துறையில் ஓடக்கரை கல்லூரி வீதி, வி.எம்.வீதி ஆகியன படையினரால் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்று அதிகாலை 5 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நடத்தப்பட்ட இத்தேடுதலின்போது பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரியவந்தது. (அ-1-226)

## தொலைத்தொடர்பு நிலையங்களில் பாவனையாளர் கூட்டம் அதிகம்

நவாலி,டிசெ.18

குடாநாட்டில் கைத்தொலைபேசிகளின் சேவை பெரும்பலான் நேரங்களில் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்கள் தொலைத் தொடர்பு நிலையங்களில் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக குடாநாட்டில் கைத்தொலைபேசி சேவை சீராக செயற்படவில்லை. நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 மணி நேரமே சேவை வழங்கப்படுகின்றது.

இதனால் தமது உறவினர்களுடன் தொடர்புகொள்ளவும் வேறு பல அவசர தேவைகளுக்காகவும் தொடர்பு ஏற்படுத்துவதற்கென பொது மக்கள் தொலைத்தொடர்பு நிலையங்களை நாடுகின்றனர். (அ-202-100)

## பங்குச்சந்தையில் தொடர் வீழ்ச்சி

கொழும்பு,டிசெ.18

வருட முடிவை எட்டும் சமயத்தில் இலங்கையில் பங்குச்சந்தை நேற்று நான்காவது நாளாகவும் சரிந்தது. ரூபாயின் பெறுமதியும் வீழ்ச்சி கண்டது என பங்குச்சந்தை நிலைவரப் புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

தொடர் விடுமுறைகள் மற்றும் வருட இறுதி கருதி வர்த்தகர்கள் சந்தைத் தொடர்பிலிருந்து விலகிச் சென்றமையும் இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. (சி)

## அரச அதிபரின் பயணம் வல்லையில் தாமதமானது

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், இலங்கை வங்கி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பருத்தித்துறை நோக்கிச் சென்றபோது அவரது வாகனம் வல்லை வெளியில் சோதனைச் சாவடியில் மறித்து விசாரிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

வாகனத்தில் அரசாங்க முத்திரை பொறிக்கப்பட்டிருந்தபோதிலும் அது வழிமறிக்கப்பட்டதைக் கண்ட மக்கள் ஆச்சரியம் அடைந்தனர்.

எனினும் உயர் அதிகாரிகள் அரச அதிபரை இனங்கண்டு இரண்டு மூன்று நிமிடங்களில்வாகனம்தொடர்ந்து செல்வதற்கு அனுமதித்தனர்.

கடந்த ஞாயிறன்று வல்லையில் அரசாங்க அதிபரின் வாகனம் மறிக்கப்பட்டு தாமதப்படுத்தப்பட்டதை அரச செயலகத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

## தமிழக மீனவர் திரும்பினர்

சென்னை,டிசெ.18

சென்னை காசி மேட்டைச் சேர்ந்த சுமார் 150 மீனவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்பு கடலில் மீன் பிடிக்கச் சென்று கடல் கொந்தளிப்புக் காரணமாக பாதுகாப்புத் தேடி கரைக்குத் திரும்பியபோது தவறுதலாக ஆந்திரமானிலத்தில் உள்ள காக்கிநாடா துறைமுக எல்லைக்குள் நுழைந்து விட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் அதிகாரிகளின் தலையீட்டை அடுத்து மீனவர்கள் தமிழகம் திரும்பினர்.

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - 03 | புதன்கிழமை |
| | 19.12.2007 |
| திதி : தசமி | மு.இ 06.58 |
| நட்சத்திரம் : | ரேவதி |
| | பி.ப 01.46 |
| சுபநேரம் | 04.53 - 06.23 |
| ராகுகாலம் | : 12.23 - 1.53 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமது தொண்டரின் படுகொலைக்கு செஞ்சிலுவை அமைப்புக் கண்டனம்

கொழும்பு,டிசெ.18

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் கீழ்ப் பணியாற்றிய சூரியகாந்தி தவராஜா (வயது - 43) என்ற செஞ்சிலுவைத் தொண்டர் கடந்த 14 ஆம் திகதி கடத்தப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டமையை சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் செம்பிறைச் சங்கம் ஆகியன கண்டித்துக் கூட்டாக அறிக்கை ஒன்றை விடுத்தன.

செஞ்சிலுவைச் சங்கத்தின் செயல்திறன் மிக்க தொண்டரான தவராஜா, கடந்த மூன்று வருடங்களாக பருத்தித்துறைப் பிரிவுத் தலைவராகக் கடமையாற்றி வந்தார்.

ஆழிப்பேரலை சமயம் அவர் ஆற்றிய பணிக்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் 'சிறந்த தொண்டர்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

''உணர்ச்சியற்ற மேலும் ஒரு கொடூரக் கொலைக்கு எங்களது மற்றொரு தொண்டர் பலியாகியிருக்கின்றமை குறித்து அதிர்ச்சி அடைகிறோம். அவரது குடும்பத்தவர்களுக்கும் உற்றாருக்கும் எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.'' - என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஜெகத் அபேசிங்க தெரிவித்தார்.

இக்கொலை தொடர்பாக உடனடியாக விரிவான விசாரணைகளை நடத்துமாறு செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கம் இலங்கை அதிகாரிகளைக் கோரியிருக்கின்றது.

கடந்த ஜூன் முதலாம் திகதி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புப் பணியாளர்கள் இருவர் கொழும்பில் பயிற்சிப்பட்டறை ஒன்றில் கலந்து கொள்ள வந்திருந்த சமயம் கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் வைத்துக் கடத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டனர் என்று குறிப்பிடத்தக்கது.

மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைவரும் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதையும் அவர்களை அல்லது அவர்களது செயற்பாடுகளை ஆபத்திற்குள்ளாக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் தவிர்க்கப்படவேண்டும் என்பதையும் முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு ஞாபகப்படுத்துகின்றோம்.

இக்கொலைகளைால் நாம் அதிருப்தியுற்றாலும் இலங்கை செஞ்சிலுவைக் குழுவானது தமது பங்காளர்களுடன் இணைந்து தனது பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள. (அ-சி-2)

## அரச - வேப்ப மரங்களுக்கு முறைப்படி திருமண நிகழ்வு

சிவகங்கை,டிசெ.18

திருமணத்தடை நீக்குதல், குழந்தைப் பாக்கியம் போன்ற வேண்டுதல்களுக்காக அரசு - வேம்பு மரங்களுக்குத் திருமணம் செய்த நிகழ்வு சிவகங்கை மாவட்டத்தில் நடந்தேறியது.

முறையாக முகூர்த்தத் திகதி குறிக்கப்பட்டு அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு மேளதாளங்களுடன் திருமணம் நடந்தேறியதாகத் தகவல்கள் கூறுகின்றன.

சிவகங்கை அருகே அண்ணா நகரில் கலியுக வரசித்தி விநாயகர் கோயில் உள்ளது. இக்கோயில் அருகே அரசு -வேம்பு மரங்கள் இணைந்துள்ளன. இம்மரங்களை சிவன், பார்வதியாகக் கருதி இப்பகுதி வாசிகள் வழிபட்டு வருகின்றனர்.

நேற்று அதிகாலை 5 மணிக்கு கோயில் வளாகத்தில் யாகசாலை பூஜை நடந்தது. மரங்களுக்கு தியாகராஜ குருக்கள் என்பவர் தலைமையில் சிறப்புப் பூஜை நடந்தது. பெண் வீட்டார் (வேம்பு) சார்பில் மேளதாளங்கள் முழங்க சீர்வரிசை கொண்டுவரப்பட்டது. அரச மரத்திற்கு பட்டுவேஷ்டியும், வேம்பு மரத்திற்கு மஞ்சள் பட்டுச்சேலையும் அணிவிக்கப்பட்டது. பிற்பகல் 12.45மணிக்கு சிவன் பிரதிநிதியாக காப்புக் கட்டிய விஸ்வநாத குருக்கள் வேம்புக்குத் தாலி கட்டினார். திரளான மக்கள் திருமணத்தைக் கண்டு களித்தனர்.

விஸ்வநாத குருக்கள் இது குறித்துக் கூறுகையில், ''இம்மரங்களைச் சுற்றி வரும் கன்னிப்பெண்களுக்கு திருமணம் கைகூடும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டும். இதனால் இப்பகுதியினர் இம்மரங்களை இஷ்ட தெய்வமாக வழிபடுகின்றனர்'' - என்றார். (சி)

# இந்துக் குருமாரின் விவரங்களை படையினர் திரட்டவில்லை

## பாதுகாப்புத் தரப்பினர் அறிக்கை

யாழப்பாணம்,டிசெ.18

யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக் குருக்கள் மற்றும் பூசகர்களின் விவரங்களை படையினர் திரட்டி வருகின்றனர் என வெளியாகும் தகவல்களில் எதுவித உண்மையும் இல்லை என்று பலாலியிலுள்ள பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பலாலித் தலைமையகத்தின் ஊடகப் பிரிவு அதிகாரி மேஜர் பி.கே.ஏ.பி.தரிஜு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ்ப்பாணம் உட்பட சர்வதேச நாடுகளில் வாழும் இந்துக்களின் மத்தியில் பாதுகாப்புப் படையினர் பற்றிய தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தும் நோக்கில் புலிகள் பல்வேறு போலிப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாணப் பிரதேசத்தின் இந்து ஆலய குருக்கள் மற்றும் பூசகர்களின் விவரங்களை பாதுகாப்புப் படயினர் திரட்டுகின்றனர் எனவும் அவர்களை அச்சுறுத்தி வருகின்றனர் எனவும் புலிகளுக்கு சார்பான இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டு பகிரங்கப்படுத்தி வருகின்றது.

இது உண்மைக்குப் புறம்பான - பாதுகாப்புப் படையினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பிரசாரமாகும்.

புலிகள் இராணுவ ரீதியிலான தோல்விகளைச் சந்தித்து வரும் இவ்வேளையில் உள்நாட்டிலிருந்தும் சர்வதேச சமூகத்திடமிருந்தும் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவ்வாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் என்பது தெளிவு. அனைத்து சந்தர்ப்பங்களிலும், மக்களை மதிக்கும் - சமாதானத்தை விரும்பும் பாதுகாப்புப் படையினர், இவ்வாறு மதகுருமாருக்கு இன்னல்களை ஏற்படுத்துகின்றனர் என்று பிரசாரங்களை மேற்கொள்ளும் பயங்கரவாதிகளின் செயற்பாடுகள் உள்நோக்கம் கொண்டவையாகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. உங்களுக்கும் உங்கள் மதகுருமாருக்கு மட்டுமன்றி உங்கள் மதத்திற்கும் மதிப்பளிக்கும் பாதுகாப்புப் படையினர், இவ்வாறான பிசாரங்கள் மூலம் மனம் தளராது புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து உங்களை மீட்டு முழுநாட்டுக்கும் சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்று உறுதியளிக்கின்றோம். - என்றுள்ளது.

(அ-2)

## ஏறாவூரில் மீனவர் கடத்தல்

மட்டக்களப்பு,டிசெ.18

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் நேற்று முன்தினம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த முஸ்லிம் கடற்றொழிலாளர்கள் மீது ஆயுதக் குழுவினர் துப்பாக்கிச் சூடு நடத்தி ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து கடற்றொழிலாளர்கள் வாவியை விட்டு வெளியேற முயற்சித்த போது அவர்களில் ஒருவரை ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளனர். இச்சம்பவத்தில் அச்சமடைந்துள்ள அப்பகுதி கடற்றொழிலாளர்கள் தொடர்ந்தும் தொழில் செய்யாமல் கரையேறியுள்ளனர்.

## டெஸ்ட் போட்டி நு.ப. 12 மணிக்கே இன்று ஆரம்பம்

கொழும்பு, டிச.18

காலி சர்வதேச மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள இலங்கை - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நண்பகல் 12 மணிக்கே ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பெய்த அடைமழை காரணமாகவே ஆட்டம் 12 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

## புலிகள் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமே சமாதானம் சாத்தியமாகும் என்று நாம் நம்புகின்றோம்'' - என்றார் அவர்.

''புலிகள் மீது தடை விதிப்பது என்பது அரசின் நோக்கம் இராணுவத் தீர்வுதான் என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தும். அந்த நடவடிக்கை பேச்சுக்கான கதவை நிரந்தரமாக மூடி விடும்'' - என்று கருத்துத் வெளியிட்டார் தேசிய சமாதானப் பேரவை அமைப்பாளர் ஜெஹான் பெரேரா.

''தடை விதிக்கப்படுமானால் அது நீக்கப்படும் வரை புலிகள் பேச்சுக்கு வரவே மாட்டார்கள்'' - என்றும் அவர் கூறினார்.

2002 ஆம் ஆண்டு, அப்போதைய ரணி லின் அரசு அமைதிப் பேச்சுக்குப் புலிகளை இணங்க வைப்பதற்காக அவர்கள் மீதான தடையை நீக்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கம். அங்குள்ளோருக்கு (புதுடில்லியில் உள்ளவர்களுக்கு) இங்கு இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை விளக்குவதன் மூலம், இந்த நெருக்கடியிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான நிலையை அவர்களுக்கு உணர்த்துவதே எமது எண்ணம்.'' - என்று தங்களின் கருத்தை விளக்கினார் புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன்.

''இது எங்களின் தனிப்பட்ட முயற்சியால் முன்னெடுக்கப்படும் பயணம். ஏதாகிலும் செய்தாக வேண்டும் என்பதை இந்தியாவுக்கு வற்புறுத்துவோம்.'' - என்று கூறினார் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) பத்மநாபா அணியின் பிரதிநிதியான ரி.ஸ்ரீதரன் (சுகு). (உ)

HAPPY XMAS SPECIAL

விலை குறைப்பிற்கெல்லாம் ஈடு கொடுத்து என்றும் எங்களுக்கே உரிய உயர்ந்த தரம் மற்றும் உயரிய உத்தரவாதத்துடன்

With Each Complete Computer set

Free

1 or 2 Gb Flash /Scanner/Printer/ /TV Capture/TV Tuner/ UPS

கவனம்! போலிகளும் விலையக் குறைத்து விற்பார்கள்

UNIT மனோகரா சந்தி

347, K.K.S Road, Jaffna

4590720, 0773134737

# ஹக்கீமின் 'கார்னிவல்' நிறுவனத்துள் வருமானவரி அதிகாரிகள் பாய்ச்சல்!

## பழிக்குப் பழிவாங்கும் நடவடிக்கை!!

கொழும்பு,டிசெ.18

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் சம்பந்தப்பட்டிருப்பதால் அவரைப் பதவி விலக்க வேண்டும் என ரவூப் ஹக்கீம் எம்.பி., கடந்த வாரம் தாம் அமைச்சராக இருந்தவரை கடுமையாக வற்புறுத்தி வந்தார்.

அதன் பெறுபேறாக, ஹக்கீம் அமைச்சர் பதவியைத் துறந்து சில நாள்களில் இறைவரித் திணைக்களம் ரவூப் ஹக்கீமுடன் தொடர்புடைய நிறுவனம் மீது அதிரடிப் பாய்ச்சல் நடத்திபிருக்கின்றது.

ஹக்கீமுடன் தொடர்புபட்ட - கொழும்பு, கொள்ளுப்பிட்டி, காலி வீதியில் உள்ள - 'கார்னிவல்' ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்துக்குள் நேற்றுத் திடீரெனப் பாய்ந்தனர் உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள்.

அங்கு சோதனைகளை நடத்திய அவர்கள் சில கோப்புகளைத் தம்முடன் எடுத்துச் சென்றனர்.

ஹக்கீமின் எதிரணிப் பக்கப் பாய்ச்சல், அரசுக்கு எதிரான கடும் விமர்சனம், ஊழல் சம்பந்தமான ஆவணங்களைச் சமர்ப்பித்தமை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளுக்கு எதிரான கடும் விமர்சனம் போன்ற சில நடவடிக்கைகளுக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் அழுத்த நடவடிக்கையே இந்தத் திடீர்ச்சோதனை என விசனம் தெரிவித்திருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள், 'பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கை இது' - என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

(சி)

# இலங்கை வங்கியின் பரு.கிளை கணனி வலை பின்னலுடன் இணைப்பு

வடமராட்சி,டிசெ.18

நாடளாவிய ரீதியில் கணனி வலைப் பின்னலுடன் பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையின் சேவயினை இணைக்கும் செயற்பாட்டை அரச அதிபர் கே.கணேஷ் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன் தலைமையில் நடைபெற்றது.

சுவாமி சித்ரூபானந்தா, பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய குருக்கள் பிரம்மஸ்ரீ ச.சிவனேசக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்க பிரதி முகாமையாளர் திருமதி பிரபாகரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், இலங்கை வங்கியின் யாழ்.பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரத்தினம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, பருத்தித்துறை நகர சபைச் செயலாளர் அ.நடராசா, இலங்கை வங்கியின் மறுசீரமைப்புத் திட்ட முகாமையாளர் எச்.எஸ்.ஜெயவர்த்தனா, இளைப்பாறிய இலங்கை வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், இளைப்பாறிய மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை, வர்த்தகர் கே.தங்கராஜா, நெல்லியடி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் வி.தில்லைநாதன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினார்கள்.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பேராசிரியர் ம.நடராஜசுந்தரம் சிறப்புரையாற்றினார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபரிடம் பேராசிரியர் நடராஜசுந்தரம் முதல் கணக்கை ஆரம்பித்து வைத்தார்.

வலைப்பின்னல் ஒழுங்கமைப்பை ஏற்படுத்திய இலங்கை வங்கியின் மறுசீரமைப்பு திட்ட முகாமையாளர் எச்.எஸ். ஜெயவர்த்தனவுக்கு பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை உத்தியோகத்தர், ஊழியர்களினால் வழங்கப்பட்ட யாழ்.குடாநாட்டையும் அதில் பருத்தித்துறையைச் சுட்டும் பனைமரமும் கொண்டதாக வடிவமைக்கப்பட்ட நினைவுச் சின்னத்தை யாழ். அரச அதிபர் அவரிடம் கையளித்தார்.

(அ-160-155)

## நிரந்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளார்க் தமது மூன்று ஆசைகளை வெளியிட்டிருந்தார். அவற்றிலொன்று இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதாகும்.

இதன் பின்னர் உரையாற்றிய ஜனாதிபதி ஆர்தர் சி.கிளார்கின் இரண்டு ஆசைகளைத் தன்னால் நிறைவேற்றி வைக்கலாம் என உறுதி வழங்க முடியாது என்றும் -

எனினும், மூன்றாவது விருப்பமான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தத் தனது நிர்வாகம் தனது அதிகார வரம்பிற்குள்ளிருந்து அனைத்தையும் செய்யப்போகின்றது என்றும் - தெரிவித்தார்.

சேர் ஆர்தர் சி. கிளார்க் இலங்கை மீது வைத்துள்ள பற்றினையும்ஜனாதிபதி பாராட்டினார்.

(உ)

## பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரது மனைவியும் தாயாரும் சடலத்தை அடையாளம் காட்டினார்கள்.

பருத்தித்துறை கல்லூரி வீதியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் அச்சம் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து கல்வியங்காட்டில் வசித்து வந்தார் என்றும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட மற்றைய சடலம் அரியாலை, இலந்தைக் குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் கௌசிகன்(வயது 22) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இருவரின் சடலங்களையும் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி பதில் நீதிவான் எஸ்.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டுள்ளார். (அ-50-1)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிலிருந்து வந்துள்ள பொறியியலாளர் குழு ஆராய்ந்து வருகின்றது.

அநுராதபுரம், திருகோணமலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 'ராடர்' கருவிகளையும் இங்கு பரிசீலனை செய்யவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யுனிசெவ்வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாணத்தின் விடுவிக்காத பகுதிகளுக்கு இராஜதந்திரிகளும் அதி உயர் அதிகாரிகளும் விஜயம் செய்யும் போது பின்பற்றவேண்டிய வெளிவிவகார அமைச்சின் அறிவுரைகளை 'யுனிசெவ்' நிறுவனம் பின்பற்றத் தவறிவிட்டது.

அந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்யும் அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கிலேயே இந்த அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தன. அங்கு செல்வதற்கு முன்னர் வெளிவிவகார அமைச்சின் முன் அனுமதியை பெற்றிருக்க வேண்டும்.

வெளிவிவகார அமைச்சின் அறிவுரைகளுக்கு அமைய செயல்படாததை ஏற்றுக்கொள்ள முடியாது என்று 'யுனிசெவ்'வின் பிரதிநிதியிடம் பாலிதகோஹென்ன சுட்டிக் காட்டியிருக்கிறார்.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (சி)

## சிறுவரைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுரைகளை நான் அறிந்திருக்கவில்லை.

'யுனிசெவ்'வின் ஆய்வுகளின்படி 240 அல்லது அதற்கு மேற்பட்ட சிறார் போராளிகளை விடுவிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவே புலிகள் இயக்கத்தின் தலைவர்களைச் சந்தித்தேன்.

இலங்கை அரசுடன் இணைந்து செயல்படுவதே எமது நோக்கமாகும். எனது விஜயம் குறித்து அனுகூலமற்ற பிரசாரம் வெளியிடப்பட்டமை கவலைக்குரியது - என்றார். (சி)

சுடர் ஒளி

THE SUDAR OLI

டிசெ. 9-டிசெ15 2007

பல அரசியல் கட்டுரைகளுடனும் வழமையான சுவையான அம்சங்களுடனும் நாளை விற்பனையில்.

உங்கள் உதயன் விநியோகஸ்தர்களிடம் கேட்டுவாங்குங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.12.2007 இல அச்சிட்டு வெளியிடப்பெற்றது.